விலை: 40.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 23
ஒலி 108 வள்ளுவர் ஆண்டு 2053 பங்குனி 23 புதன்கிழமை (06.04.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=
மட்டுமே



## இலங்கையின் வரலாற்றில் முக்கிய கட்டம் ஒவ்வொருவரினதும் குரலும் முக்கியம்

### இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் டுவிட்



(கொழும்பு)

"இலங்கை தனது வரலாற்றில் ஒரு முக்கியமான கட்டத்தில் நிற்கும் இந்தத் தருணத்தில், ஒவ்வொருவரினதும் குரலும் முக்கியமானதாகும்."

இவ்வாறு இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜுலி சங் தெரிவித்துள்ளார்.

இதனை தனது டுவிட்டர் பதிவில் வெளியிட்டுள்ள அவர்,

"எதிர்ப்பாளர்கள் அமைதியுடன் செயற்பட வேண்டும். அவர்களின் குரல்கள் மற்றும் ஒற்றுமையைப் பயன்படுத்தி மாற்றத்துக்காக எடுக்கப்படும் முயற்சிகளை நான் வரவேற்கின்றேன்.

இதற்கான தீர்வை 15

## நிதி அமைச்சராக பந்துல குணவர்த்தன

(கொழும்பு)

அலி சப்ரியின் வெற்றிடத்துக்கு புதிய நிதியமைச்சராக பந்துல குணவர்தன சத்தியப்பிரமாணம் செய்ய உள்ளதாக தகவல்கள் கிடைக்க பெற்றுள்ளன.

நிதியமைச்சர் பதவியில் இருந்து அலி சப்ரி இராஜினாமா செய்தமையை அடுத்து,

குறித்த வெற்றிடத் 15

## நிதியமைச்சின் செயலாளர் பதவி விலகினார்

(கொழும்பு)

திறைசேரி மற்றும் நிதியமைச்சின் செயலாளர் எஸ்.ஆர். ஆட்டிகல பதவி விலகியுள்ளதாக அறிவித்துள்ளார்.

தமது பதவி விலகல் கடிதத்தை ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ளதாக அவர் தெரிவித்தார். 15

## மீண்டும் பதவி விலகினார் அலி சப்ரி

(கொழும்பு)

நிதியமைச்சராக நேற்று முன்தினம் பதவிப் பிரமாணம் செய்துகொண்ட முன்னாள் நீதியமைச்சர் அலி சப்ரி மீண்டும் நேற்று பதவி விலகியுள்ளார்.

நேற்று பாராளுமன்றில் அரசாங்கம் 15

# பெரும்பான்மைப் பலத்தை இழந்த ராஜபக்ஷ அரசு

## ஆளும் தரப்பிலிருந்து 39 எம்.பிக்கள் விலகல்


### அரசியலில் பாரிய மாற்றத்துக்கு வாய்ப்பு



(கொழும்பு)

நாடு முழுவதும் அரசுக்கு எதிராக போராட்டங்கள் வெடித்துள்ள நிலையில் பாராளுமன்றில் அரசுக்கு வழங்கிவந்த ஆதரவை விலக்கிக் கொள்வதாக 39 எம்.பிக்கள் அறிவித்துள்ளனர்.

(15ஆம் பக்கம் பார்க்க)



## திருடர்கள் நாட்டை விட்டு வெளியேறுவதை தடுக்க

### விமான நிலையத்தை உடனே மூடுக

### சபையில் விஜித ஹேரத்



(கொழும்பு)

பல மில்லியன் ரூபாய் பொதுச் சொத்துக்களை கொள்ளையடித்த நிஸ்ஸங்க சேனாதிபதி கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து தப்பிச் சென்றுள்ளதாக தேசிய 15

## இலங்கையின் அரசியல், பொருளாதார நிலைமைகளை அவதானிக்கின்றோம்

### சர்வதேச நாணய நிதியம் அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் அரசியல் மற்றும் பொருளாதார நிலைமைகள் தொடர்பில் மிக உன்னிப்பாக அவதானித்து வருவதாக சர்வதேச நாணய நிதியம் (IMF) அறிவித்துள்ளது.

புதிதாக நியமிக்கப்படும் நிதி அமைச்சரின் அமெரிக்க விஜயத்தின்போது, எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு தமது அதிகாரிகள் தயாராகவுள்ளதாக சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான தூதுக்குழுத் தலைவர் மஷாஹிரோ ஹிசாக்கி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நிதி அமைச்சின் செயலாளர் S.R.ஆட்டிகல நேற்று தமது பதவியை இராஜினாமா செய் 15

## 'எங்களை சுடுவதற்காக வந்தீர்களா?'

## ஆர்ப்பாட்டத்தில் சிறப்பு படையணி புகுந்ததால் பரபரப்பு



(கொழும்பு)

அரசாங்கத்துக்கு எதிராக நாடளாவிய ரீதியில் நேற்றும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களும் போராட்டங்களும் முன்னெடுக்கப்பட்டன. 15

## எரிபொருளுக்காகக் காத்திருந்த

## தனியார் பேருந்தின் சில்லுக்குள் சிக்கிய ஒருவர் உயிரிழப்பு

### புன்னாலைக்கட்டுவனில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

எரிபொருளுக்காக வரிசையில் நின்ற தனியார் பேருந்தின் கீழ் இறங்கி நிலத்தில் அமர்ந்திருந்த பயணி சாரதியின் கவனக்குறைவினால் சில்லு ஏறி உயிரிழந்துள்ளார்

புன்னாலைக்கட்டுவன் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் 15

## பின்புறமாக வெளியேறிய பாராளுமன்ற உறுப்பினர்கள்

(கொழும்பு)

மக்களின் எதிர்ப்பையடுத்து பாராளுமன்றத்தில் பின்புறமாக சபை உறுப்பினர்கள் வெளியேறியுள்ளனர்.

மக்களின் போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்சித் தலைவர்களின்

# கூட்டத்திலிருந்து திடீரென வெளியேறிய பசில்

(கொழும்பு)

முன்னாள் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ச நேற்று செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இருந்து திடீரென வெளியேறிச் சென்றார்.

இதன்போது ஊடகம் ஒன்றுக்கு கருத்து தெரிவித்த அவர், அரச தலைவரும் பிரதமரும் மற்ற அரசியல் கட்சிகளைச் சேர்ந்த எவரையும் நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல அழைப்பு விடுத்ததாக தெரிவித்தார்.

பாராளுமன்றில் சில எம்.பி.க்கள் சுயேச்சையாக இருக்க எடுத்த முடிவைப் பாராட்டிய அவர், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஒரு சுயேச்சையான கட்சி எனவும் மேலும் தெரிவித்தார். (ம)

பாராளுமன்றில் கூச்சல், குழப்பம்

# ஆவேசமாகப் பேசிய முஷாரப்பிற்கு ரூ. 5 ஆயிரம் தாளை காண்பித்த சாணக்கியன்



(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் முஷாரப் சபையில் உரையாற்றும்போது அவர் முன் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் 5ஆயிரம் ரூபா நாணயத்தாளை நீட்டிய சம்பவம் தற்போது சமூக வலைத்தளங்களில் வைரலாகியுள்ளது.

இந்த சம்பவத்தால் சபையில் கூச்சல் ஆரவாரம் ஏற்பட்டுள்ளது. பாராளுமன்ற அமர்வு நேற்று காலை பத்து மணிக்கு ஆரம்பமாகிய நில்லயில் ஆளுங்கட்சியிலுள்ள அரசியல் கட்சித் தலைவர்கள் சுயாதீனமாக செயற்படுவதாக அறிவித்தனர்.

இதனை தொடர்ந்து நாட்டின் நிலைமை மற்றும் அரசியல் கட்சிகளின் செயற்பாடுகள் என்பன தொடர்பில் முஷாரப் எம்.பி கருத்து தெரிவித்தார்.

இந்த சந்தர்ப்பத்தில் அவர் முன்சென்ற சாணக்கியன் 5 ஆயிரம் ரூபா தாளொன்றை நீட்டியபடி அதனை பெற்றுக் கொண்டு பேசுமாறு சைகை செய்தார்.

எனினும், தான் நாட்டு மக்களுக்காகவே பேச வந்துள்ளதாகவும், டயஸ்போராவின் பணத்தை பெறுபவர்களுக்காக பேச வரவில்லை எனவும் முஷாரப் எம்.பி குறிப்பிட்டுள்ளார்.

இதனையடுத்து, முஷாரப் எம்.பியை பேச இடமளிக்குமாறு சாணக்கியன் எம்.பிக்கு சபாநாயகர் அறிவுறுத்தியமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், 20 ஆவது திருத்த சட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்து அரச தலைவருக்கு பாராளுமன்ற அதிகாரத்தை வழங்கியதோடு, சலுகைகளையும் பெற்றுக்கொண்டுவிட்டு மீண்டும் சுயாதீனமாக செயற்படுகின்றேன் என்னும் போர்வையில் அரசோடு இணைந்து ஆதரவளிப்பதே இவரது நோக்கம், அதன் காரணமாகவே முஷாரப்புக்கு ஓர் சலுகையாக 5 ஆயிரம் ரூபாவை சாணக்கியன் வழங்கியிருந்தார் என அவரது உத்தியோகபூர்வ முகநூல் பக்கத்தில் பதிவிடப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ம)

# ஒட்டுசுட்டானில் நீரில் மூழ்கிய 25 வயது இளைஞன் பலி

(பனிக்கன்குளம்)



ஒட்டுசுட்டானில் நீரில் மூழ்கிய இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ஒட்டுசுட்டான் பிரதேச இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் நமசிவாயம் டிலக்சன் (வயது 25) என்ற இளைஞனே நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் நேற்று மாலை 4 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில், ஒட்டுசுட்டான் பொலிஸ் பிரதேச செயலாளர் பிரிவின் காதலியார் சம்மணங்குளம் கிராம அலுவலர் பிரிவின் ஏம்பகுளம் குளத்தில் நில அளவை திணைக்களத்தினர் நில அளவை பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இதன்போது நில அளவைத் திணைக்களத்தின் பணியாளராக பணிபுரிந்து வந்த வித்தியாபுரம் பகுதியை சேர்ந்த ஒட்டுசுட்டான் பிரதேச இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் நமசிவாயம் டிலக்சன் உள்ளிட்ட நான்கு பேர் நில அளவை பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இதன்போது நில அளவை பணிக்காக குளத்தில் இறங்கிய போதே குறித்த இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் சேற்றில் புதையுண்டு நீரில் மூழ்கி பலியாகியுள்ளார். (ம-281)

வடமராட்சி அண்ணா சிலையடியில்

# விபரீத முடிவெடுத்த இளம் யுவதி மரணம்

(கரணவாய்)



வடமராட்சி அண்ணா சிலையடி பகுதியில் இளம் யுவதி ஒருவர் உயிரிழந்துள்ளார்.


நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை குறித்த இளம் யுவதி விபரீத முடிவு எடுத்து உயிரிழந்துள்ளார் .

இச்சம்பவத்தில் உதயநாதன் நிலுகா (வயது 25) என்ற யுவதியே உயிரிழந்துள்ளார்.

சடலம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் உடல் கூற்று பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

விசாரணைகளை நெல்லியடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-60)

3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் : 01.10.1946 விண்ணில் : 10.04.2019

அமரர் முத்துக்குமாரு தங்கவேல்

வல்வை விளையாட்டுக் கழகத்தின் நீண்டகாலம் தலைவராகவும்
சைனிங்ஸ் விளையாட்டுக் கழகத்தின் உறுப்பினராகவும் இருந்தவர் (தங்கப்பா)

எம் குடும்பத்தின் ஒளிவிளக்கே
எம்மை விட்டுச் சென்றதேனோ - இன்றும்
எம் காவல் தெய்வமாய் உடனிருப்பதாய்
உணர்கிறோம் நாமிங்கே....

இன்று (06.04.2022) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறவிருக்கும் கிரியை நிகழ்விலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(C-4121)

நடராசா வீதி,
வல்வெட்டித்துறை.

குடும்பத்தினர்

# அவசரகாலச் சட்டத்தினை நீக்கினார் ஜனாதிபதி கோட்டா

(கொழும்பு)

அவசரகால நிலையை பிரகடனப்படுத்தி வெளியிடப்பட்ட பிரகடனத்தை இரத்து செய்யும் வர்த்தமானி அறிவித்தலை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வெளியிட்டுள்ளார்.

நேற்று செவ்வாய்க்கிழமை நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. (ம)

பாராளுமன்றம் மூலம் புதிய ஜனாதிபதி!

# இடைக்கால அரசை அமைக்குக

## பொருளாதார நெருக்கடிக்கு 2 தீர்வுகள் முன்மொழிவு

நாட்டின் தற்போதைய பொருளாதார பிரச்சினைக்கு 2 தீர்வுகள் முன்வைக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி பதவி விலகி பாராளுமன்றத்தின் ஊடாக புதிய ஜனாதிபதி ஒருவர் நியமிக்க வேண்டும் அல்லது இடைக்கால அரசாங்கத்தை அமைக்க வேண்டும் என்பவை குறித்த முன்மொழிவுகளாகும்.

எவ்வாறாயினும், அதற்கான எந்த ஏற்பாடும் அரசியலமைப்பில் இல்லை எனவும் சபாநாயகர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பாராளுமன்றத்தைக் கலைக்கும் முன்மொழிவு முன்வைக்கப்பட்டுள்ளதாகவும், அதற்கான அதிகாரம் ஜனாதிபதிக்கு இல்லை என்பதனால் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரினால் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்றலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# பாராளுமன்றத்திற்கு எதிராகவும் மக்கள் ஒன்று திரள்வார்கள்

## சபையில் ரணில் எச்சரிக்கை

(கொழும்பு)


நிறைவேற்று அதிகாரத்திற்கு செயற்பட முடியாத நிலை ஏற்பட்டுள்ளதால், அதன் பொறுப்பை பாராளுமன்றம் ஏற்று அனைவரும் இணைந்து நெருக்கடிக்கு தீர்வு காணப்பட வேண்டும் என முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற பாராளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இந்த விடயத்தினை தெரிவித்துள்ளார். தொடர்ந்தும் அவர் தனது உரையில்,

பாராளுமன்றம் தனது கடமையை செய்ய தவறினால், பாராளுமன்றத்தில் இருக்கும் அனைவருக்கும் எதிராகவும் மக்கள் அணி திரள்வார்கள் என்றார். (ம)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசிற்கெதிராக தொடரும் போராட்டங்கள்



கொழும்பு புதுக்கடை நீதிமன்ற வளாகத்திற்கு முன் சட்டத்தரணிகள் ஆர்ப்பாட்டம்







நாட்டை தெருவுக்கு கொண்டு வந்த திருடர்களை விரட்டியடிப்போம் -மட்டக்களப்பில் போராட்டம்-



பாராளுமன்ற சூழலில் முற்றுகை போராட்டம்



மக்களுடன் மக்களாக வீதிக்கு இறங்கினார் கொழும்பு பேராயர்



வவுனியா பல்கலைக்கழக மாணவர்கள் போராட்டம்

## நான்கு மாதங்களின் பின் பாராளுமன்றம் வந்த பசில்

(கொழும்பு)



முன்னாள் நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ நான்கு மாதங்களுக்கு பின்னர் நேற்று செவ்வாய்க்கிழமை பாராளுமன்றில் பிரசன்னமாகியிருந்தார்.

நிதியமைச்சராக அவர் இருந்த போது பாராளுமன்றத்திற்கு வராமையால் கடுமையான விமர்சனத்திற்கு உள்ளானார்.

அத்தோடு, நாடு மிக மோசமான பொருளாதார நெருக்கடிக்குள் நுழைந்ததையடுத்து, கடந்த ஞாயிற்றுக் கிழமை இரவு முழு அமைச்சரவையும் இராஜினாமா செய்தது. இறுதியாக அவரும் தனது பதவியிலிருந்து விலக வேண்டியிருந்தது. அதனைத் தொடர்ந்து, பசில் நாட்டை விட்டு வெளியேறி மீண்டும் அமெரிக்கா சென்றுள்ளதாக அண்மைய நாட்களில் வதந்திகள் பரவிய நிலையில், அவர் நேற்று பாராளுமன்றில் பிரசன்னமாகி அமைதியாக அமர்ந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

## நெருக்கடி தீர இடைக்கால அரசாங்கம் அவசியம்

### பாராளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ

(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வை காண்பதற்காக பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்களது தனிப்பட்ட நிகழ்ச்சி நிரலை கைவிட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்தார்.

நாட்டின் நெருக்கடி நிலை தொடர்பில் கருத்து வெளியிடுகையில் அவர் இவ்வாறு கூறினார். இதன்போது மேலும் கருத்து தெரிவித்த அவர்,

"நாட்டின் தற்போதைய நெருக்கடிக்கு தீர்வை காண்பதற்காக இடைக்கால அரசாங்கமொன்றை ஏற்படுத்த வேண்டும்.

இதற்கான பொறுப்பை சபாநாயகர் ஏற்கவேண்டும்.

தற்போதைய நெருக்கடிக்கு தீர்வை காண்பதற்காக இடைக்கால அரசாங்கத்தை அமைக்கா விட்டால் முழு நாடும் எங்களை சபிக்கும்" என அவர் தெரிவித்தார். (நி)

## தூதரகங்களை மூடத் தீர்மானம்

(கொழும்பு)

வெளிநாடுகளில் உள்ள இலங்கை தூதரகங்கள் மற்றும் துணைத் தூதரகத்தை மூட வெளிவிவகார அமைச்சு தீர்மானித்துள்ளது.

அதன்படி ஒஸ்லோ, நோர்வே மற்றும் பாக்தாத், ஈராக் ஆகிய இடங்களில் உள்ள தூதரகங்கள் மற்றும் சிட்னியில் உள்ள இலங்கை துணைத் தூதரகம் மூடப்படவுள்ளது.

ஏப்ரல் 30 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் குறித்த தூதரகங்கள் மற்றும் துணைத் தூதரகம் மூடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராகுல், தீபக் அதிரடி

## ஹைதராபாத்தை வீழ்த்தியது லக்னோவ்



ஐ.பி.எல். இருபது-20 தொடரின் 12ஆவது லீக் போட்டியில், லக்னொவ் சுப்பர் ஜியண்ட்ஸ் அணி 12 ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது. மும்பையில் நேற்று முன்தினம்நடைபெற்ற இப்போட்டியில், லக்னொவ் சுப்பர் ஜியண்ட்ஸ் அணியும் சன்ரைசஸ் ஹைதராபாத் அணியும் பலப்பரீட்சை நடத்தின. இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற சன்ரைசஸ் ஹைதராபாத் அணி, முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய லக்னொவ் சுப்பர் ஜியண்ட்ஸ் அணி, நிர்ணயிக்கப்படட 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 169 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது. இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, கே.எல். ராகுல் 68 ஓட்டங்களையும் தீபக் ஹூதா 51 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர். சன்ரைசஸ் ஹைதராபாத் அணியின் பந்து வீச்சில், வொஷிங்டன் சுந்தர், ரொமாறியோ செப்பர்ட் மற்றும் நடராஜன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர். இதனைத்தொடர்ந்து 170 என்ற வெற்றி இலக்கை நோக்கிப் பதிலுக்கு களமிறங்கிய சன்ரைசஸ் ஹைதராபாத் அணியால், நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 157 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது. இதனால், லக்னொவ் சுப்பர் ஜியண்ட்ஸ் அணி 12 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, ராகுல் திரிபத்தி 44 ஓட்டங்களையும் நிக்கோலஸ் பூரான் 34 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர். லக்னொவ் சுப்பர் ஜிய ண்ட்ஸ் அணியின் பந்து வீச்சில், அவிஷ்கான் 4 விக்கெட்டுகளையும் ஜேஸன் ஹோல்டர் 3 விக்கெட்டுகளையும் குர்ணல் பாண்ட்யா 2 விக்கெட்டுகளையும் பெற்றுக் கொண்டனர். இப்போட்டியின் ஆட்ட நாயகனாக பந்துவீச்சில் 4 விக்கெட்டுகளை வீழ்த்திய லக்னொவ் பந்துவீச்சாளர் அவிஷ்கான் தெரிவு செய்யப்பட்டார். (4)




## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2551

Search for people, places and things

### சதுர்சன்

உங்க தட்டுக்கு தோசை வந்தா...
அம்மா சுடராங்கனு அர்த்தம்!
நீங்களே தட்டோட கிச்சனுக்கு போனால்
மனைவி சுடராங்கனு அர்த்தம்!



அதே பொண்டாட்டி தோசைன்னு கேட்டா அங்க
தோசை சுடுரதே புருசங்காரன்னு அர்த்தம்.

### கபினா


காதல் வளத்தேன் காதல் வளத்தேன்
உன் மேல் நானும் புள்ள காதல் வளத்தேன்



காதல வளத்ததுக்க பதிலா ஆடு, மாடு
வளத்துருந்தா நாலு காசாவது
பாத்துருக்கலாம்.

### கஸ்தூரன்

மனைவி: எனக்கு உங்க கூட நூறு
வருஷம் வாழனும்
கணவன்: இல்ல! எனக்கு இது உருட்டா
இருக்குமோன்னு பயமா இருக்கு
மனைவி: ஆமா உருட்டுன்னா என்னா?
கணவன்: அய்யோ எப்படி வளத்துருக்காங்க...!



### தனுசன்

அது எப்படி?



உருளைகிழங்கு நிறைய சாப்பிட்டா கால்
வலிக்கும்னு சொல்றாங்க அது நடக்குது
ஆனா
வெண்டக்கா நிறைய சாப்பிட்டா மூளை
வளரும்னு சொல்றாங்க அது மட்டும்
நடக்கவே மாட்டேங்குது

### கேதாரன்



என்னடா ஒரு Message கூட
படிக்கவே முடியல



அண்ணே இவங்க ரெண்டு பேரும்
டாக்டர் அதான் கையெழுத்து புரியல

### சுரேஜிதா




இந்த பிச்சக்காரங்க தொல்ல தாங்க முடியல...




அம்மா நான்தாம்மா... கிரவுண்ட்ல கிரிக்கெட்
விளையாடிட்டு வாரேன்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# காட்டு யானைகளால் தென்னங்கன்றுகள் நாசம்



(கருமபுரம்)

கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பெரிய குளம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு காட்டுயானைகளால் வாழ்வாதாரத்திற்காக வைக்கப்பட்டு ஐந்து வருடம் கடந்த நிலையிலுள்ள தென்னங்கன்றுகள் முற்றாக அழித்து நாசமாக்கப்பட்டன.

தற்பொழுது அறுவடை முடிந்து இரண்டு மாதங்கள் கடந்த நிலையில் குறித்த பகுதிக்கு காட்டு யானைகள் வர ஆரம்பித்துள்ளன.

இது ஒவ்வொரு வருடமும் இடம்பெறுவது வழக்கம்.

எனவே தமது பாதுகாப்பிற்காக யானை வெடியினை" பெற்றுத்தருமாறும் அழிவுக்கு நட்டயீட்டினை கமநலசேவையுடக பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் அப்பகுதி மக்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். (4-5-316)

# பரீட்சை பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உயர்பட்டப்படிப்புகள் பீடத்தினால் 09.04.2022 அன்று பிற்பகல் 1.30- 3.30 மணிவரை நடத்தப்பட இருந்த கல்வியியல் முதுமாணி (Master of Education)-2021/22 (அணிXIV) இற்குரிய மாணவர்களை தெரிவு செய்வதற்கான தெரிவுப்பரீட்சை நாட்டில் நிலவும் தற்போதைய அசாதாரண சூழ்நிலை காரணமாகவும் கணிசமான தேர்வு நாடிகள் வெளிமாவட்டத்தினராகவும் காணப்படுகின்ற காரணத்தினால் பிற்போடப்படுவதாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பதிவாளர் அறிவித்துள்ளார்.

இப்பரீட்சைக்கான புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் தெரிவித்தார். (5-4)

## வேலையாட்கள் தேவை

நல்லூரில் வீட்டு வேலை மற்றும் அதனுடன் இணைந்த மருந்து தயாரிப்பு நிறுவனத்திற்கு துப்பரவு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்கு 40-55 வயதிற்கு உட்பட்ட பெண் வேலையாட்கள் தொடர்பு கொள்ளவும் தங்குமிட வசதியும் செய்து தரப்படும்.

076 140 4074

(10922)

# மரண அறிவித்தல்

தோற்றம் 14 06 1969



மறைவு 02 04 2022

## திருவாளர் நவரத்தினசிங்கம் வாகீசன் {B.Sc. Eng (Hons), ACMA}

சாமியன் அரசடி கரவெட்டியை பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட திருவாளர் நவரத்தினசிங்கம் வாகீசன் {B.Sc. Eng (Hons), ACMA} 02.04.2022 அன்று கொழும்பில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை நவரத்தினசிங்கம் (இலங்கை மத்திய வங்கி) மற்றும் வேதநாயகி (இளைப்பாறிய ஆசிரியை) அவர்களின் கனிஷ்ட புதல்வரும், காலம் சென்றவர்களான குலரத்தினம் புஷ்பராணி தம்பதிகளின் அருமை மருமகனும், ரஜினியின் அன்பு கணவரும், யதுஷா, விதுஷன், மிதுஷன் ஆகியோரின் அன்பு தந்தையும், Dr.ஜனகன், சுரேந்திரன் (பொறியியலாளர்), ஜசோதா (USA) ஆகியோரின் அன்பு சகோதரனும், சுபோதினி, யசோதா, விநாயகமூர்த்தி (USA), தர்ஷினி (USA) ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்றவர்களான சிவயோகநாதன், ஆனந்தசிகாமணி, சிவக்கொழுந்து மற்றும் தெய்வசிகாமணி, சிற்றம்பலநாதன் ஆகியோரின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர்களான தணிகாசலம், பூலோகசிங்கம் மற்றும் விக்னராஜா, செல்வநாயகி ஆகியோரின் அன்புப் பெறாமகனும் ஆவார்.

**அன்னாரின் பூதவுடல் இறுதி அஞ்சலிக்காக 06 .04 .2022 புதன்கிழமை காலை 08.00 மணி முதல் கல்கிசை மஹிந்த மலர் சாலையில் வைக்கப்பட்டு தகன கிரியைகளுக்காக பிற்பகல் 1.30 மணியளவில் கல்கிசை மயானத்துக்கு எடுத்து செல்லப்படும்.**

இவ் அறிவித்தலை உற்றார் மற்றும் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு தாழ்மையுடன் வேண்டுகின்றோம்.

**தகவல்:- ந.சுரேந்திரன் (சகோதரன்) - வா. விதுஷன் (மகன்)**

(10919)

# அலங்கார திருவிழா

(குப்பிழான்)

ஏழாலை கண்ணகை அம்பாள் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழா இன்று புதன்கிழமை மாலை ஆரம்பமாகும்.

தொடர்ந்தும் 11 தினங்கள் இடம் பெறவுள்ள இவ் அலங்கார உற்சவத்தில் எதிர்வரும் 16 ஆம் திகதி சனிக்கிழமை சித்திரை பூரணை தீர்த்தத் திருவிழா இடம்பெறவுள்ளது. (5-4-18)

# கையூட்டு பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர் வட்டுக்கோட்டையில் கைது

(யாழ்ப்பாணம்)

திருட்டுச் சம்பவம் ஒன்றில் சந்தேக நபரிடம் 30 ஆயிரம் ரூபாய் கையூட்டுப் பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வட்டுக்கோட்டை - பொன்னாலை வீதியில் வைத்து அவர் நேற்று லஞ்ச, ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டார்.

திருட்டுச் சம்பவம் தொடர்பில் சந்தேக நபர் அடையாளம் காணப்பட்ட நிலையில் அவரிடமிருந்து கையூட்டு பெற முற்பட்ட போதே பொலிஸ் உத்தியோகத்தர் கைது செய்யப்பட்டார். (5-4-33-104)

# நீரை சிக்கனமாகப் பயன்படுத்துங்கள்

## நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை

(கருமபுரம்)

கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களில் உள்ள நீர் சுத்திகரிப்பு நிலையங்களில் இருந்து மக்களின் நாளாந்த தேவைக்கு ஏற்ற அளவில் நீரை சுத்திகரித்து விநியோகிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே மேற்படி மாவட்டங்களில் எதிர்வரும் நாட்களில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் நீர் விநியோகம் மேற்கொள்ளப்படவுள்ளது என தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் கிளிநொச்சி முல்லைத்தீவு அலுவலகம் தெரிவித்துள்ளது.

தற்காலிகமாக ஏற்பட்டுள்ள இந்த நிலைமையின் காரணமாக பொது மக்கள் நீரை சிக்கனமாக பயன்படுத்துமாறு நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை பொது மக்களிடம் அறிவித்துள்ளது. (5-4-316)

# இராசிபலன்

06.04.2022
பங்குனி 23, புதன்கிழமை
பஞ்சமி பிற்பகல் 5.57 மணிவரை

ரோகிணி முன்னிரவு 7.32 மணிவரை
சுபநேரம்- 4.38-6.08 மணிவரை
இராகுகாலம் -12.08-1.38 மணிவரை

சந்திராஷ்டமம்- சுவாதி, விசாகம்

வளவன்




வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், துணிவும் தன்நம்பிக்கையும் அதிகரிக்கும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.




புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், அதிஷ்ட வாய்ப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.




அடுத்தவர் விவகார விடயங்களில் தலையிடுவதை தவிர்ப்பது நல்லது, மனதில் கவலைகள் தோன்றி மறையும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.




பிள்ளைகள் வழியில் பெருமையான சம்பவங்கள் நடைபெறலாம், வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும், வழிபாட்டால் குதூகலம் காணவேண்டிய நாள்.




திட்டமிட்ட காரியமொன்றில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், கற்பனை மிகுதியான நாள், மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.




வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், செய்தொழில் மேன்மையுண்டு, போசன சுகமுண்டு.




சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், காரிய அனுகூலமுண்டு.




பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், மனதில் தோன்றுவதை செய்வீர்கள், பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.




குடும்ப பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது, சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்,




தொழிலில் இருந்த எதிர்ப்புக்கள் விலகும், சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.




கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் வெற்றி தரும், உற்சாகமான நாள், செய்தொழில் மேன்மையுண்டு.




பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள், போசன சுகமுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியியல் துறை பேராசிரியர் சந்திரசேகரனுக்கு யாழ்.பல்கலை கல்வியியல் துறை அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

சிரேஷ்ட கல்வியியல் துறை பேராசிரியர் சோ.சந்திர சேகரனின் இழப்பு இலங்கை கல்விச்சமூகத்திற்கு பேரிழப்பு என யாழ்.பல்கலைக்கழக கல்வியியல் துறை தெரிவித்துள்ளது.

யாழ்.பல்கலைக்கழக கல்வியியல் துறை வெளியிட்ட அவரது அஞ்சலி செய்தியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

இலங்கைக் கல்வி முறைமையிலும் பல்கலைக்கழகங்களின் கல்வியியல் துறை வரலாற்றிலும் கனதியான இடத்தை தனதாக்கிய மூத்த கல்வியியல் பேராசிரியர் சோ.சந்திரசேகரனின் பிரிவு இலங்கைகல்வித் துறையில் மீள் நிரப்பமுடியாத இழப்பாகும்.

அவரது வெற்றிடம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வியியல் துறைக்கும் பேரிழப்பாகும்.

யாழ். பல்கலைக்கழக கல்வியியல் துறையுடன் நீண்ட கால தொடர்பினை அறிவார்ந்த ரீதியில் கொண்டிருந்த அவர் வருகைதரு விரிவுரையாளர், இரண்டாம் பரீட்சகர், பட்டப்பின் கற்கைகளின் ஆய்வுச் செயற்பாடுகளின் மேற்பார்வையாளர், பரீட்சகர் எனப் பலவகிபாகங்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துடனும் குறிப்பாக உயர்பட்டப்படிப்புக்கள் பீடம் மற்றும் அதனூடாக கல்வியியல் துறையுடனும் கொண்டிருந்தவர்.

கல்வியியல் சார்ந்த அறிவைப் பரவலாக்குவதில் கனதியான பங்களிப்பை நல்கிய பேராசிரியரின் ஆக்கங்கள் இன்றும் கல்வித்துறை சார் கற்கைகளில் அதிக தாக்கத்தைச் செலுத்துபவன.

மலையகபுலத்தில் பிறந்து இலங்கையின் வடக்குப் புலத்தால் தத்தெடுக்கப்பட்டு மான்புற்றவர்களாகத் திகழ்ந்த ஒரு தலைமுறையின் முன்னோடி உதாரண புருசராகத் திகழ்ந்தவர்.

கற்பித்தலே தனது முதற்பணி எனக் கொண்ட அவர் அதற்கான தொடர் தேடலையும் கற்றல் அனுபவத்தையும் தனது வாழ்வின் இறுதிக் கணம் வரை கொண்டிருந்தவர்.

அரசாங்கம் சார்ந்த கல்விக்கான பல நியமனக் குழுக்களில் சிறுபான்மை மக்களின் பிரதிநிதியாக அவர் பல தக்க இடங்களை தனது அறிவு மற்றும் ஆற்றலால் அலங்கரித்தவர்.

இத்தகைய உயர் விழுமியங்களைக் கொண்ட பேராசிரியர் சந்திரசேகரனின் இழப்பு இலங்கைக் கல்விச் சமூகத்துக்கு குறிப்பாக தமிழ் பேசும் சமூகத்துக்கு பேரிழப்பாகும். அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்புடன் தமிழ்க் கல்விச் சமூகத்தின் சார்பில் எமது அஞ்சலிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம் என மேலும் குறிப்பிட்டுள்ளது. (4-5)



யாழ்ப்பாண மாவட்டத்தில் லங்கா சதொசா மொத்த விற்பனை பரிமாறும் நிலையம் திறப்பு விழா லங்கா சதொசா சிரேஷ்ட முகாமையாளர் சஞ்சீவ வீர கொற்றகொட அவர்களின் தலைமையில் நேற்று முன்தினம் நாவற்குழியில் திறந்துவைக்கப்பட்டது .

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக, யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் க .மகேசன் உதவி மாவட்டச் செயலாளர் திருமதி.எஸ்.சி.என்.கமலராஜன், பிரதேச செயலாளர் திருமதி.உஷா சுபலிங்கம்.ஆகியோர் கலந்துகொண்டனர்.

(படம்- சிவசாந்தன், ரவிசாந்)

# யாழ்.நகரில் இப்படியும் நடக்கின்றது



(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா மருத்துவமனை வீதியில் தரித்து வைக்கப்படும் வாகனங்களின் இருக்கைகள் விஷமிகளால் சேதமாக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக மோட்டார் சைக்கிள் இருக்கைகளே சேதமாக்கப்படுகின்றன.

மருத்துவமனைக்கு வருபவர்கள் ஏற்கனவே ஏதோ ஒரு பிரச்சினைகளால் அவதியுறுகின்றவர்களாக இருக்கையில் அவர்களுக்கு இப்படி ஒரு நெருக்கடியை சிலர் கொடுக்கின்றனர்.

எனவே உரியவர்கள் கவனத்தில் எடுத்து மேலும் இவ்வாறான செயற்பாடுகள் இடம் பெறாமல் இருக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென பாதிக்கப்பட்டவர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். (5-4)

# ஜனாதிபதியின் அழைப்பை நிராகரித்த தமிழ் பேசும் கட்சிகள்

(யாழ்ப்பாணம்)

இடைக்கால அரசில் பங்கேற்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விடுத்த அழைப்பை தமிழ் பேசும் கட்சிகளும் நிராகரித்துள்ளன.

இலங்கையில் தற்போது நிலவும் தேசிய நெருக்கடிக்கு தீர்வுகாண அனைத்துக் கட்சிகளை உள்ளடக்கிய இடைக்கால அரசாங்கத்தை அமைப்பதற்கான ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விடுத்த அழைப்பை தமிழ் தேசிய கூட்டமைப்பு ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தமிழ் முற்போக்குக் கூட்டணி, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகிய அரசியல் கட்சிகளும் நிராகரித்துள்ளன.

அனைத்துக் கட்சிகள் அடங்கிய இடைக்கால அரசாங்கத்தை அமைப்பதற்கு கைகோர்க்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விடுத்த அழைப்பை தமிழ் தேசிய கூட்டமைப்பு நிராகரிப்பதாக நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போது பாராளுமன்ற உறுப்பினர் த. சித்தார்த்தன் தெரிவித்தார். (5-4)

# விபத்தில் கார்கள் சேதம்

(அராலி)


வல்லை - அச்சுவேலி சந்தியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விபத்தில் இரு கார்கள் சேதமடைந்தன.

இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

வல்லை வீதியில் நிறுத்தி வைக்கப்பட்ட காருடன் மற்றுமொரு கார் மோதியதில் குறித்த விபத்து இடம் பெற்றது.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அச்சுவேலி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (5-4-104)

# டீசலுக்காக காத்திருந்த வாகனங்கள்



(கரணவாய்)

வடமராட்சியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மதியம் டீசல் வழங்கப்படுவதாக தெரிவிக்கப்பட்ட தகவலை அடுத்து காலையில் இருந்து வாகனங்கள் நீண்ட வரிசையில் காத்திருந்தன.

இரவாகியும் டீசல் வராத நிலையிலும் வாகனங்கள் நீண்ட வரிசையில் காத்திருந்தன. (5-4-60)

# எட்டு இலட்சம் பெறுமதியான கால்நடைகள் திருட்டு

(குப்பிழான்)

பொருளாதார நெருக்கடி மிகுந்த தற்போதைய காலகட்டத்தில் பண்ணைக்குள் இரவு வேளையில் உள்நுழைந்த கொள்ளையர் குழு சுமார் எட்டு இலட்சம் ரூபாய் பெறுமதியான கோழிகளையும், நல் இன ஆடுகளையும் களவாடிச் சென்றுள்ளனர். இச் சம்பவம் ஏழாலை வடக்கு காளி கோயிலடியில் அண்மையில் இடம் பெற்றுள்ளது.

பண்ணைப் பொறுப்பாளர் இரவு தனது வீட்டிற்குச் சென்று விட்டு மறுநாள் காலையில் மீண்டும் வந்து பார்த்த போது பண்ணையில் திருட்டு இடம் பெற்றிருப்பது தெரியவந்தது.

பண்ணைக்குள் புகுந்த திருடர்கள் அங்கு பொருத்தப்பட்டிருந்த சிசிரிவிக் கமரா இணைப்பைத் துண்டித்து, அங்கு கட்டப்பட்டிருந்த சுமார்- 35 ஆயிரம் ரூபாய் பெறுமதியான 12 நல்லின ஆடுகளையும், கோழிக் கூடு பிரிக்கப்பட்டு அங்கு பாதுகாப்பாக விடப்பட்டிருந்த ஒவ்வொன்றும் தலா 8 ஆயிரம் ரூபாய் பெறுமதியான 50 கடக்நாத் கோழிகளையும்,மற்றும் கினிக் கோழிகளையும் களவாடிச் சென்றுள்ளனர்.

மேற்படி சம்பவம் தொடர்பாக சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார்மேலதிக விசாரணைகளையும் மேற் கொண்டு வருகின்றனர். (5-4-18)

**வரலாற்றுச் சிறப்பு மிக்க தென்மராட்சி மட்டுவில் பன்றித்தலைச்சிக் கண்ணகை அம்மன் ஆலய 3ம் பங்குனித் திங்கள் உற்சவம் நேற்று முன்தினம் சிறப்புற இடம்பெற்றது.**

படம்- சிவசாந்தன்



# தரம் 6 இற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய கல்லூரியில் தரம் 6 இற்கான அனுமதி விண்ணப்பப்படிவங்களை பாடசாலை நேரத்தில் பெற்றுக் கொள்ளமுடியும்.

அத்தோடு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 140 புள்ளிகள் அல்லது அதற்கு மேல் புள்ளிகளை பெற்ற மாணவர்களுக்கு JCC Edu Care Trust மூலம் விசேட புலமைப்பரிசில் முன்னுரிமை அடிப்படையில் உள்வாங்கப்பட்டு மாதாந்த கொடுப்பனவு வழங்கப்படும் எனவும்.

விண்ணப்ப படிவங்களை 18.04.2022 ஆம் திகதிக்கு முன்னர் அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் யாழ். மத்திய கல்லூரி அதிபர் கலாநிதி எஸ்.கே எழில் வேந்தன் அறிவித்துள்ளார். (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

2021 ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்தியடைந்து எமது பாடசாலைக்கு பெருமை சேர்த்த மாணவர்களான

வேந்தன் சுபாணனன் -192
(கோட்டம்- 1ம் இடம்
வலயம், மாகாணம்)-3ம் இடம்
தர்மநாதன் கபிஸ்ணா-172
சசிகுமார் ஷந்தோஸ் -164
இளங்கோ ஆர்த்திகா -155
பிரசன்னா சயூரி -151
பகீதரன் தரங்கினி -151
குகநாதன் அக்ஷயன் -150
பகீதரன் மதுமிலா -148
ஆகியோரை பாராட்டி
வாழ்த்துகின்றோம்.




(10894) வாழ்த்துவோர் - பாடசாலைச் சமூகம், யா/ அச்சுவேலி ஆரம்பப் பாடசாலை.

# பகிரங்க ஏலவிற்பனை

வட்டுக்கோட்டை அராலி மத்தி சிவபுரி மடத்திற்கு சொந்தமானதும் 1954 ஆம் ஆண்டின் வே. நாகலிங்கம் நொத்தாரிஸ் அத்தாட்சிப்படுத்திய 8705 ஆம் இலக்க தருமகர்த்தா நியமன உறுதியில் காட்டப்பட்டுள்ள 101 ஆம் இலக்க ஆதனமான காரைநகர் கிழக்கில் உள்ள கிராச்சாவு தச்சன் பிட்டி என்ற பர-நெல்- இலா-200 பரப்பு ஆதனத்தின் கிழக்குப் பகுதியாக இதற்கூடாகப் போகும் வலந்தலை துறைமுக வீதிக்கு மேற்குப் பக்கமாக உள்ள இவ்வாதனத்தின் எல்லை பூவரசமரங்களை வீதி அகலிப்பிற்காக வீதி வேலைகாரரால் அகற்றப்பட்ட ஒரு தொகை பூவரச விறகுகளை சிவபுரிமட தேவைக்காக வரும் 16.04.2022 ஆம் திகதி மாலை 02.00 மணியளவில் வட்டுக்கோட்டை வட்டு கற்பகச் சோலை தமிழினி அரைக்கும் ஆலை முன்றலில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் என்பதனை இத்தால் யாவருக்கும் அறிவித்தல் தருகின்றேன்.

**இங்ஙனம்,**
**உண்மையுள்ள,**
**பா.சிறிஸ்கந்தன்**
**சிவபுரிமட மடாதிபதி,**
**சி.சொக்கநாதனின்,**
**அற்றோனிக் தத்துவக்காரன்.**

(10917)

**தொடர்புகளுக்கு,**
T.P- 077 833 2954

# ஜனாதிபதி முறைமை இரத்து செய்ய வேண்டும்

## சஜித் பாராளுமன்றில் தெரிவிப்பு

(கொழும்பு)

மக்களின் குரல் பாராளுமன்றத்திலும் எதிரொலிக்க வேண்டும் அதற்கு ஆட்சி மாற்றம் தேவை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பாராளுமன்றில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து மேலும் தெரிவிக்கையில், நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதி முறைமை இரத்துச் செய்வதற்கானபிரேரணையை இந்த வாரத்திற்குள் சபையில் சமர்ப்பிக்குமாறும் தெரிவித்தார். (நி)

# வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகம் மாதகல்

## ஆதன உரிமைமாற்ற அறிவித்தல்

வட்டாரம்:- 05
ஆதன் இல :- 32/23
வீதி :- சங்கக்கடை ஒழுங்கை
கிராம சேவையாளர் பிரிவு :- J/ 151
வலி தென்மேற்கு பிரதேச செயலாளர் பிரிவு,


எமது இடாப்பில் மேற்குறிப்பிடப்பட்ட இலக்கத்தில் அமைந்துள்ள இவ் ஆதனமானது, உறுதிப்படி வட மாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் மேற்குப் பகுதி பண்டத்தரிப்புக் கோவிற்பற்று மாதகல் இறை : "யாவத்தை" பரப்பு நில.இலாச்சம் மூன்றும் வீட்டின் பகுதியும் வான்பயிர் செய்பயிர்களும் இவ் பரப்பு நில. இலாச்சம் மூன்றுக்கும் எல்லைகள்,

கிழக்கு : லோகநாதன் பெண் மார்டீனா கிறேஸ்க்கும் மறுபேருக்குரிய ஆதனம்;
வடக்கு : சம்பரலிம் அன்ரனுக்குரிய ஆதனமும் ஆரோக்கியசாமி ஞானப்பிரகாசத்துக்குரிய ஆதனமும்;
மேற்கு : கார்த்திகேசு நாகராசாவுக்குரிய ஆதனமும் மனோகரனுக்கும் பெண் பரமேஸ்வரிக்குமுரிய ஆதனம்;
தெற்கு : ஒழுங்கை

இன்னும் இவ்வாதனத்தின் தென்கிழக்கேயுள்ள கிணற்றில் பங்கும் வழமையான வழிவாய்காற் பாவிப்புரித்தும் உட்பட இதடங்கலும்.

குறித்த இவ் ஆதனமானது உறுதி இலக்கங்கள் 660/04.05.2014 (A.S. அற்புதராஜ்), 659 /04.05.2014 (A.S. அற்புதராஜ்) என்பவற்றின் படி பொன்னையா லோகநாதனும் பெண் மார்டீனா கிறேஸ்உம் என்பவருக்கு அறுதியாக வந்தடைந்தமையினை உறுதிப்படுத்தி எமது பண்டத்தரிப்புக் கிராம உப அலுவலக (மாதகல்) ஆதனவரிப் பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார்.நில அளவையாளர் திரு. A. கமலசேகரம் அவர்களால் 24.04.2014ம் திகதிய 6242'ம் இலக்கத்தில் அளந்து தயாரிக்கப்பட்ட நில அளவைப்படத்தில் லொட் 1 எனச் சுட்டப்பட்டுள்ள ஆதனமாகும் "யாவத்தை" எனப் பெயர் கொண்ட இவ் ஆதனத்தின் பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் பிரசுரித்த திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும், அவ்வாறு யாரும் ஆட்சேபனைகள் ஏதும் தெரிவிக்காதவிடத்து குறித்த ஆதனமானது பொன்னையா லோகநாதனும் பெண் மார்டீனா கிறேஸ்உம் எனும் பெயருக்கு ஆதனப் பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனையும் இந்த ஆதன உரிமைமாற்றம் செய்வதால் எதிர்காலத்தில் ஏற்படவிருக்கும் எவ்வித குறைபாடுகள், பிரச்சினைகள், பிசகு தடைகளிற்கு வலிகாமம் தென் மேற்கு பிரதேச சபை பொறுப்பாளி ஆக மாட்டாது என்பதனையும் அறியத்தருகின்றேன்.

32/23 - உ.கோ.A.முத்துத்தம்பி
32/24 - யு.சிங்கராசா
32/25 - ஆரோக்கியநாதர் பெண் ஜேபவதி
32/27 - பொன்னையா லோகநாதன் பெண் மார்டீனா கிறேஸ்




**திரு.அ.ஜெபநேசன்,**
**தவிசாளர்,**
**வலிகாமம் தென் மேற்குப் பிரதேசசபை,**
**மானிப்பாய்.**

(10918)

# சிவபூமி முதியோர் இல்லம்

## வழக்கம்பராய்,தொல்புரம்,சுழிபுரம்.

## 15 ஆவது ஆண்டு நிறைவு விழா

SIVA POOMI

**காலம் - 07.04.2022**
**(வியாழக்கிழமை மாலை 3.00 மணி)**
**இடம் - சிவபூமி முதியோர் இல்லம்**
**(பாலச்சந்திரன் அரங்கு)**

அன்புடையீர்.

**வணக்கம்,**

இறைவனருளாலும். பெரியோர்களின் ஆசியாலும். எமது சிவபூமி முதியோர் இல்லம் பதினைந்து ஆண்டுகளாக எம் மண்ணில் ஆதரவற்ற மூத்தோர்க்கு ஆறுதல் வழங்கும் நிலையமாக செயற்பட்டு வருகின்றது.கடந்த 07.04.2007 அன்று ஆரம்பிக்கப்பட்ட எமது இல்லத்தின் வளர்ச்சியில் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் ஆதரவு வழங்கிய பல அன்பு உள்ளங்களை நீள நினைந்து நன்றி கூறுகின்றோம். எமது இல்லத்தில் வாழ்ந்து இதுவரை இறைவனடியில் ஆறுதல் பெற்ற மூத்தோரின் நல்லாசிகளும் எங்கள் பணி தொடர வழி வகுக்கின்றது. தொடர்ந்தும் எங்கள் இல்லம் தன்பணி தொடர தங்கள் அன்பும் ஆதரவும் வேண்டி அமைகின்றோம்.

**பிரதம விருந்தினர்**
பேராசிரியர் செ.கண்ணதாசன் தம்பதிகள்
பீடாதிபதி - உயர் பட்டப்படிப்புகள் பீடம்
யாழ் பல்கலைக்கழகம்.

**சிறப்பு விருந்தினர்கள்**
திருமதி. இராஜாம்பாள் பாலச்சந்திரன் அவர்கள்
(புளோறிடா. அமெரிக்கா)

**கௌரவ விருந்தினர்**
திருமதி. பிரேமினி பொன்னம்பலம்
(பிரதேச செயலாளர்- வலி மேற்கு பிரதேச செயலகம். சங்கானை)

**புதிய கட்டடத் தொகுதி திறப்புவிழா**
**வல்வெட்டி அமரர் விசாலாட்சி குமாரசாமி நினைவாக**
**அமரரின் பிள்ளைகள் அன்பளிப்பு**

**நிகழ்ச்சி நிரல்**

- சிவபூமி ஞான வைரவர் ஆலய வழிபாடு
- புதிய கட்டடம் திறத்தல்
- மங்கல விளக்கேற்றல்
- திருமுறை பாராயணம்
- **ஆசியுரை**
  - சிவஸ்ரீ ரங்கநாத குருக்கள்
    *(வழக்கம்பராய் முத்துமாரி அம்மன் ஆலயம்)*
  - ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்
    *(முதல்வர் - நல்லை ஆதீனம்)*
  - ஆன்மீக சுடர் ரிஷி தொண்டுநாத சுவாமிகள்
    *(சுப்பிரமணிய கோட்டம் - கோப்பாய்)*
- வரவேற்புரை
- தலைமையுரை - கலாநிதி. ஆறு திருமுருகன்
- **கலை நிகழ்வுகள்**
  - நடனம்- கோண்டாவில் சிவபூமி மனவிருத்தி பாடசாலை மாணவர்கள்
  - நாடகம்- சண் நாடகக் குழுவினர் வழங்கும்
    "தலையெழுத்து"
    "அங்கிருதத்தி"
- பணியாளர் கௌரவிப்பு
- நன்றியுரை

(10903)

## அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

நிர்வாகசபை, சிவபூமி முதியோர் இல்லம்,
021 321 4230, 021 225 0085

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 13

## மனம் உண்டானால் மார்க்கமுண்டு...



போகும் வழியில் ஒரு மின்கம்பத்தில் ஒரு சிறு துண்டு காகிதம் எழுதி தொங்க விடபட்டிருந்தது. அப்படி என்னதான் அதில் எழுதியிருக்கு என்ற ஆர்வத்தில் நானும் போய் படித்தேன்.

அதில் "என்னுடைய 50 ரூபாய் தொலைந்து விட்டது. யார் கையிலாவது கிடைத்தால் தயவு செய்து இந்த விலாசத்தில் தருமாறு கேட்டு கொள்கிறேன். எனக்கு கண் பார்வை அவ்வளவு சரியில்லை" என்று விலாசத்துடன் எழுதியிருந்தது.

எனக்கும் பொழுது போகவில்லை, அந்த குறுக்கு வழியில் பார்த்த ஒரு நபரிடம் விலாசம் கூறி வழி கேட்டேன். "இந்த அம்மாவா, கொஞ்சம் தூரம் போனால் ஓர் பழைய வீடு இருக்கும். அங்க தான் அந்த கண் தெரியாத அம்மா இருக்கு".

அங்கே ஓர் சிறிய கீத்து கொட்டகை. ஒரு நாள் மழைக்கு கூட தாங்காது. வெளியில் , கண்கள் குழி விழுந்து, எலும்பும் தோலுமாக வயதான ஓர் அம்மா . என் காலடி சத்தம் கேட்டதும், யாருப்பா நீ? அம்மா நான் இந்த வழியாக வந்தேன். 50 ரூபா கீழே விழுந்து கிடந்தது அதை உங்களிடம் தரலாம் என்று வந்தேன். கேட்டதும் அந்த அம்மா அழ ஆரம்பித்து விட்டார்.

தம்பி ரெண்டு நாளா கிட்டத்தட்ட முப்பது முப்பத்தஞ்சு பேர் வந்து 50 ரூபா கீழே விழுந்து கிடந்தது என்று சொல்லி குடுத்துட்டு போறாங்க.. அந்த கடிதம் நான் எழுதவில்லை. எனக்கு எழுத படிக்க தெரியாது. பரவாயில்ல அம்மா நீங்க வச்சிக்கிங்க என்று சொல்லி கொடுத்து திரும்பினேன். தம்பி நீ போகும் போது மின்கம்பத்தில் இருக்கும் அந்த கடிதத்தே மறக்காமல் கிழித்து போட்டு விடு என்று அறிவுரைத்தாள் அந்த தாய்.

என் மனதில் வித விதமான எண்ணங்கள். யார் அந்த கடிதத்தை எழுதி இருப்பார். அந்த கடித்ததே கிழித்து விடு என்று அந்த அம்மா ஒவ்வொருவரிடமும் கூறி கொண்டு தான் இருப்பார். ஆனால் யாரும் அப்படி செய்யவில்லை. யாரும் இல்லாமல் அனாதையாக வாழும் ஓர் உயிருக்கு கடித வடிவில் உதவி செய்த அந்த நண்பருக்கு மனத்தால் நன்றி சொல்லி கொண்டேன். நன்மை செய்யவேண்டும் என்ற மனம் இருந்தால் அதற்கு ஆயிரம் வழி.

மனதில் யோசித்து கொண்டே வரும்போது வழியில் ஒருவர் என்னிடம். "-அண்ணே இந்த விலாசம் எங்கே என்று சொல்ல முடியுமா? கீழே இருந்து 50 ரூபாய் கிடைத்தது. அந்த அம்மா கிட்டே குடுக்கணும். வழி சொல்றீங்களா? மனித நேயம் சாகவில்லை...

**தமிழ் தமிழன்**
5 mutual

## படகு கவிழ்ந்ததில் 23 பெண்கள் உயிரிழப்பு

### சூடானில் சோகம்


(ஜூபா)

சூடானின் தென்கிழக்கு மாகாணமான சென்னார் பகுதியில் 'ப்ளூ நைல்' நதியில்ஒரு படகு ஒன்று மூழ்கியதில் 23 பேர் உயிரிழந்ததாக சூடானிய அதிகாரிகள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை அறிவித்துள்ளனர்.

தோட்டத் தொழிலாளர்களான இந்தப் பெண்கள் வேலைக்குச் சென்றுவிட்டு படகில் வீடு திரும்பிக் கொண்டிருந்த போது படகு கவிழ்ந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர். (நி)

## புடினை போர்க் குற்றங்களுக்காக விசாரிக்க வேண்டும்

### ஜோ பைடன் வலியுறுத்தல்



(மொஸ்கோ)

உக்ரைனில் ரஷ்யப் படைகள் செய்ததாகக் கூறப்படும் அட்டூழியங்கள் பற்றிய ஆதாரங்கள் வெளிவருவதால், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமீர் புடினை போர்க் குற்றங்களுக்காக விசாரிக்க வேண்டும் என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் வலியுறுத்தியுள்ளார்.

தலைநகர் கீவ் அருகே உள்ள புச்சா நகரில் பொது மக்கள் கொல்லப்பட்டதாகக் கூறப்படும் ·விவகாரம், சர்வதேச கோபத்தை அதிகரித்துள்ள நிலையில், புடின் ஒரு மிருகத்தனமானவர் என்றும் புடின் ஒரு போர்க்குற்றவாளி என்றும் ஜோ பைடன் தெரிவித்துள்ளார். (நி)

## உக்ரைனிய குழந்தைகள் உடம்பில் பெற்றோர் எழுதும் தகவல்கள்

### நெஞ்சை உருக்கும் புகைப்படங்கள்



(கீவ்)

ரஷ்ய தாக்குதலில் தாங்கள் இறந்து போனால் குழந்தைகளை உறவினர்களிடம் ஒப்படைக்க ஏதுவாக இருக்க அவர்கள் முதுகில் குடும்ப தகவல்களை உக்ரைனிய பெற்றோர் எழுதியிருக்கும் புகைப்படங்கள் வெளியாகி நெஞ்சை உருக்கியுள்ளன.

இந்த தகவலை உக்ரைனிய பெண் பத்திரிகையாளரான அனஸ்டாசியா லேபடினா தனது டுவிட்டர் பக்கத்தில் புகைப்படத்துடன் வெளியிட்டுள்ளார்.

எங்களுக்கு போரில் ஏதாவது நேர்ந்தால், எங்கள் பிள்ளைகளை யாராவது காப்பாற்ற இப்படி எழுதியுள்ளதாக பெற்றோர் தெரிவித்ததாக லேபடினா தெரிவித்தார். (நி)

## மீட்கப்

## பாரிய ப

(கீவ்)

**உக்ரைனில் மிக பே**
**ரஷ்யப் படைகள் ஈடுப**
**உக்ரைன் ஜனாதிப**
**தெரிவித்தார்.**


ரஷ்யப் படைகளின் மனிதப் படுகொலைகள், போர்க்குற்றங்கள் தொடர்பில் மேலும் பல ஆதாரங்கள் விரைவில் வெளியாகும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

உக்ரைன் தலைநகர் கீவ்வின் வடமேற்கில் உள்ள புச்சாவில் ரஷ்யப் படைகளிடம் இருந்து மீண்டும் கைப்பற்றப்பட்ட பகுதிகளில்

## புதிய பிரதமர்

## இம்ரான் இடைக்

## பாகிஸ்தான்



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் பாராளுமன்றம் கலைக்கப்பட்டதால் பிரதமர் இம்ரான் கான் பிரதமராக நீடிக்க முடியாது என அமைச்சரவை செயலாளர் அறிவித்த நிலையில், காபந்து பிரதமர் அறிவிக்கப்படும் வரை இம்ரான் பிரதமராக நீடிப்பார் என அந்நாட்டு ஜனாதிபதி ஆரிப் அல்வி அறிவித்துள்ளார்.

பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கானுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் கொண்டுவந்த நம்பிக்கையில்லா தீர்மானம், அந்நாட்டு பாராளுமன்றத்தில் நிராகரிக்கப்பட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்ட உக்ரைன் நகரங்களில் மனித புதைகுழிகள் கண்டறிவு

மோசமான மனிதப் படுகொலைகளில் டுபட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளதாக திபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி



படுகொலை செய்யப்பட்ட நூற்றுக் கணக்கான உடல்கள் கண்டுபிடிக்கப் பட்டதைத் தொடர்ந்து, ரஷ்யப் படையினரின் போர்க்குற்றங்கள் குறித்த குற்றச்சாட்டுக்கள் வெளியாகியுள்ளன.

எனினும் பொதுமக்கள் படுகொலை தொடர்பான உக்ரைனின் குற்றச்சாட்டுக்களை ரஷ்யா திட்டவட்டமாக மறுத்துள்ளது.

இது ஆத்திரமூட்டும் குற்றச்சாட்டு. ரஷ்யப் படைகள் போர்க்குற்றங்களிலும் ஈடுபடவில்லை என்பதற்கான ஆதாரங்களை ஐ.நா. பாதுகாப்புச் சபையில் முன்வைக்கவுள்ளதாகவும் ரஷ்யா தெரிவித்துள்ளது.

எனினும் ரஷ்யா மனிதப் படுகொலைகளில் ஈடுபட்டுள்ளதாகவும் அது குறித்து சர்வதேச சமூகத்திற்கு விளக்கமளிக்கப்படும் என்றும் நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை வெளியிட்ட காணொளி ஒன்றில் உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி தெரிவித்தார்.

ரஷ்யப் படைகளிடமிருந்து மீட்கப்பட்ட உக்ரைன் - புச்சா நகரத்தில் பாரிய மனிதப் புதைகுழிகள் கண்டுபிடிக்கப் பட்டன.

அதில் சுமார் 300 பொது மக்கள் வரை புதைக்கப் பட்டிருக்கலாம் எனவும் ஜெலென்ஸ்கி குறிப்பிட்டார்.

இதேபோன்று ஆக்கிரமிப்பு ரஷ்யப் படைகளால் கைப்பற்றப்பட்ட பல உக்ரைனிய நகரங்களில் மேலும் பலர் படுகொலை செய்யப்பட்டிருக்கலாம்.

எனவே இவ்வாறான மனிதப் படுகொலைகளின் எண்ணிக்கை இன்னும் அதிகமாக இருக்கலாம் என்று தகவல் உள்ளது எனவும் அவர் தெரிவித்தார். (நி)

## ர் நியமிக்கப்படும் வரை டக்கால பிரதமராக நீடிப்பார்

## ஜனாதிபதி அறிவிப்பு



பிரதமர் இல்லை என பாகிஸ்தான் அமைச்சரவை செயலாளர் திடீரென அறிக்கை வெளியிட்டார்.

அதில், "அமைச்சரவை மொத்தமாக கலைக்கப்பட்டு விட்டது. அதனால் இம்ரான் கான் தானாக பதவியை இழக்கிறார்.

அமைச்சரவை இல்லாத காரணத்தால் பிரதமராக நீடிக்க முடியாது" என தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனால் பாகிஸ்தான் அரசியலில் குழப்பம் துவங்கிய நிலையில், ஜனாபதி தரப்பில், காபந்து பிரதமர் அறிவிக்கப்படும் வரை இம்ரான் கான் பிரதமராக நீடிப்பார் என்ற அறிவிப்பு வெளியானது.

இருவேறு அறிவிப்புகள் அடுத்தடுத்து வந்ததால் பாகிஸ்தானில் குழப்பம் நீடிக்கிறது.

ஆனாலும், ஜனாதிபதியின் அறிவிப்பின்படி இம்ரான் பிரதமராக தொடர்வார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

டது.

இதனையடுத்து, பாராளுமன் றத்தை கலைக்க கோரி ஜனாதிபதி ஆரிப் அல்வியிடம் பிரதமர் இம்ரான் கான் கடிதம் எழுதினார். இதனை ஏற்ற ஜனாதிபதி பாராளுமன் றத்தை கலைத்ததுடன், 90 நாட்களுக்குள் தேர்தல் நடத்தவும் உத்தர விட்டார்.

நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிராகரிக்கப்பட்டது தொடர்பாக எதிர்க்கட்சிகள் உச்சநீதிமன்றத்தை நாடியுள்ளன.

இந்நிலையில், பாராளுமன்றம் கலைக்கப்பட்டதால் இம்ரான் கான்

## மிகப்பெரிய தாக்குதல் நடத்த ரஷ்யா திட்டம்

## உக்ரைன் எச்சரிக்கை

(கீவ்)

ரஷ்யாவின் எல்லைப் பகுதியில் அமைந்துள்ள கிழக்கு நகரங்களான கார்கீவ், நிப்ரோவ், டொனெட்ஸ்-மகிவ்கா, ஷப்ரிஷிஷியா, மரியுபோல், லுஹன்ஸ், ஹர்லிவ்கா, கமின்ஸ்கி ஆகிய நகரங்கள் மீது ரஷ்யா மீண்டும் மிகப்பெரிய தாக்குதலை நடத்த தயாராகி வருவதாக உக்ரைன் எச்சரித்துள்ளது.

ஏற்கனவே கைப்பற்றிய சில பகுதிகளில் இருந்து ரஷ்ய படையினர் பின்வாங்கி வருகின்ற நிலையில், இந்த செய்தி வெளிவந்துள்ளது.

இந்த நிலையில், உக்ரைன் தாக்குதலில் ரஷ்ய இராணுவத்தைச் சேர்ந்த 18,300 வீரர்கள் உயிரிழந்துள்ளதாக உக்ரைன் இராணுவம் தெரிவித்துள்ளது.

மேலும், 147 விமானங்கள், 134 ஹெலிகொப்டர்கள், 647 டாங்கிகள், 7 படகுகள், 1,273 நான்கு சக்கர வாகனங்கள், 76 எரிபொருள் நிரப்பும் வாகனங்கள், 1,844 இராணுவ வீரர்களை ஏற்றிச் செல்லும் கனரக வாகனங்கள், 4 மொபைல் ரொக்கெட் லொஞ்சிங் மெஷின், 92 ஆளில்லா விமானங்கள் அழிக்கப்பட்டுள்ளதாக உக்ரைன் கூறியுள்ளது. (நி)

## 50 இலட்சம் ரூபாய் சொத்தை ராகுல் காந்திக்கு எழுதிய மூதாட்டி

(டில்லி)



உத்தரகாண்ட் மாநிலம் டேராடூனில் வசித்து வருபவர் புஷ்பா 79 வயதாகும். இவர் குடும்பத்தினர் யாரும் இன்றி தனியாக சுற்றி வருகிறார்.

டேராடூனில் உள்ள பள்ளி ஒன்றில் ஆசிரியையாக பணி புரிந்து ஓய்வு பெற்ற இவர் வங்கிகளில் 16 வங்கி கணக்குகளில் பணம் சேமித்து வைத்துள்ளார்.

திருமணம் செய்து கொள்ளாத அவர் காங்கிரஸ் மீது மிகுந்த பற்று கொண்டவர்.

அவருக்கு டேராடூனில் ரூ.50 லட்சம் மதிப்புள்ள வீடு மற்றும் வங்கி கணக்குகளில் பணம் உள்ளது.

நேற்று முன்தினம் டேராடூனில் உள்ள நீதிமன்றத்துக்கு சென்றார். அங்கு தனது பெயரில் உள்ள சொத்துக்களை தனது மரணத்திற்கு பிறகு காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்திக்கு வழங்க வேண்டும் என்று பத்திரம் எழுதிக் கொடுத்தார்.

அவர்களின் அர்ப்பணிப்பு என்னை மிகவும் கவர்ந்தது. எனவே எனது சொத்துக்களை ராகுல் காந்திக்கு வழங்குகிறேன் என புஷ்பா தெரிவித்தார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதவி வெற்றிடம்

எமது சங்கத்தில் வெற்றிடமாக்வுள்ள பின்வரும் பதவிகளுக்கு தகுதியானவர்களிடம் இருந்து வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பப்படிவங்களை சங்க வேலை நாட்களில் தலைமைக் காரியாலயத்தில் ரூபா20/= செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் தலைவர். புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம். புலோலி கிழக்கு. பருத்தித்துறை. என்ற முகவரிக்கு 24.04.2022 ம் திகதிக்கு முன்னர் நேரில் அல்லது பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும்.

| | | |
|---|---|---|
| 01. **பதவி** | :- | **பொதுமுகாமையாளர்** |
| சம்பள குறியீட்டு இல | :- | 101/07 |
| சம்பள அளவுத்திட்டம் | :- | 18835-245 X10-265X10-23935 |
| (கூ.ஊ.ஆ.சு.நி 01/2018) | | 226020-2940X10-3180X10-287220 |

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்**

ஆ) கூட்டுறவு ஊழியர் 8 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்/ கூட்டுறவு ஊழியர் 09 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் முகாமைநிலை/ மேற்பார்வை நிலைப்பதவியொன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்

**அல்லது**

ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப்பட்டம்/ அதற்குச் சமமான தகைமை. இத்தன்மையானது கணக்கியல் / வியாபாரப்புள்ளி விபரவியல்/ வியாபாரக் கற்கைகள் தொடர்பான பாடங்களை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

இலங்கை தொழில்நுட்பக் கல்லூரியின் கணக்கியல்/ முகாமைத்துவம்/ வர்த்தகம் தொடர்பான உயர் தேசிய டிப்ளோமா சித்தி.

**அல்லது**

இ) கூட்டுறவு ஊழியர் உயர்தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில்/ அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை நிலைப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 05 ஆண்டு கால அனுபவம்/ க.பொ.த.உயர் தரப் பத்திரப் பரீட்சையில் கணக்கியல் உட்பட 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில்/ அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை நிலைப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 06 ஆண்டு கால அனுபவம்.

| | | |
|---|---|---|
| 02. **பதவி** | :- | **கணக்காளர்** |
| சம்பள குறியீட்டு இல | :- | 104/09 |
| சம்பள அளவுத்திட்டம் | :- | 18010-220 X10-230X10-22510 |
| (கூ.ஊ.ஆ.சு.நி 01/2018) | | 216120-2640X10-2760X10-270120 |

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்**

அ) கூட்டுறவு ஊழியர் 10 ஆவது சம்பளத் திட்டப் பதவியில் கணக்காளர்/ உள்ளக கணக்காய்வாளர்/ கணக்குப்பதிவாளர் பதவியில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்/ கூட்டுறவு ஊழியர் 11 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் உள்ளகக் கணக்காய்வாளர்/ கணக்குப் பதிவாளர் கணக்கு அல்லது கணக்காய்வு எழுதுநர் பதவியில் ஆகக்குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்

**அல்லது**

ஆ) இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியின் கணக்கியலிலான டிப்ளோமா/ இதற்கு சமனான தகைமை/ மாகாண கூட்டுறவுப் பயிற்சி நிறுவனத்தினால்/ தேசிய கூட்டுறவு டிப்ளோமா பரீட்சையில் சித்தி

**அல்லது**

இ) கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் கணக்கியல்/ கணக்காய்வு துறையில் ஆகக் குறைந்தது 03 அண்டு கால அனுபவம்./ அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கியல்/ கணக்காய்வு துறையில் ஆகக்குறைந்தது 03 ஆண்டு கால அனுபவம்.

க.பொ.த உயர்தரப்பத்திர பரீட்சையில் கணக்கியல் உட்பட 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் கணக்கியல்/ கணக்காய்வு துறையில் ஆகக்குறைந்தது 04ஆண்டு கால அனுபவம்/ அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கியல்/ கணக்காய்வு தொடர்பான பதவியொன்றில் 04 ஆண்டு கால அனுபவம்.

| | | |
|---|---|---|
| 03 **பதவி** | :- | **இலிகிதர்** |
| சம்பள குறியீட்டு இல | :- | 302/14 |
| சம்பள அளவுத்திட்டம் | :- | 15960-135 X10-145X10-8760 |
| (கூ.ஊ.ஆ.சு.நி 01/2018) | | 191520-1620X10-1740X10-225120 |

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்**

அ) கூட்டுறவு ஊழியர் 15 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் எழுதுனர்/ காசாளர்/கணனிப்பக்க உருவாக்குனர் பதவியொன்றில் ஆகக்குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்./ கூட்டுறவு ஊழியர் 16ஆவது சம்பளத் திட்டப் பதவியில் எழுதுநர்/ காசாளர்/ கணனிப்பக்க உருவாக்குநர் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

ஆ) கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி./ க.பொ.த சாதாரண தரப்பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம்/ தமிழ்மொழி. கணிதம் என்பவற்றை உள்ளடக்கி 06 பாடங்களுடனான சித்தி.

**பொது நியந்தனைகள்**

1. வயது 18.04.2022 ஆம் திகதிக்கு 18 வயதிற்கு குறையாதவர்களாகவும் 45வயதிற்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும்.
2. கல்வித் தகைமைகள். அனுபவம். வயது வதிவிடத்தை உறுதிப்படுத்துதல். நற்சான்றிதழ். தேசிய அடையாள அட்டை என்பவற்றின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.
3. நியமனத்தின் போது சுற்றுநிருபத்திற்கமைவாக ரொக்கபிணை செலுத்த தயாராக இருத்தல் வேண்டும்.
4. ஏனைய சங்கங்களில் இருந்து விண்ணப்பிப்பவர்கள் அச்சங்கத்தினூடாக விண்ணப்பிக்க வேண்டும்.
5. சங்க பணியாளருக்கு வயதெல்லை கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

**தலைவர்**
**புலோலி.ப.நோ.கூ.சங்கம்,**
**புலோலி கிழக்கு,**
**பருத்தித்துறை.**

(கி-4128)

# டிப்பர்- மோ.சைக்கிள் விபத்து ஒருவர் படுகாயம்



(கண்டாவளை)

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பரந்தன் நகர் பகுதியை அண்மித்த பகுதியில் நேற்று முன்தினம் இரவு புதுக்குடியிருப்பு நோக்கி பயணித்த டிப்பர் வாகனமும் பரந்தன் நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதியதில் விபத்து ஏற்பட்டது. முரசுமோட்டை பகுதியைச் சேர்ந்த ஒருவர் படுகாயம் அடைந்த நிலையில் கிளிநொச்சி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தின் டிப்பர் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (5-4-316)



மலையாளபுரம் விசேட தேவைக் குட்பட்டோர் வலையமைப்பின் சிறுவர் பூங்காவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் நேற்று முன்தினம் திறந்து வைத்தார். குறித்த பூங்கா அமரர் அமரதாஸ் மேரிறெஜினாவின் நினைவாக நியூசிலாந்தில் வசிக்கும் அவரது மகன் அமரதாஸ் செல்வதாஸினால் அமைக்கப்பட்டது.

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 280 | 220 | 280 |
| உருளைக்கிழங்கு | 200 | 190 | 220 |
| பச்சைமிளகாய் | 380 | 250 | 500 |
| தக்காளி | 100 | 70 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 100 | 120 |
| கோவா | 100 | 100 | 100 |
| கரட் | 220 | 200 | 300 |
| பூசணி | 80 | - | 100 |
| புடோல் | 100 | 120 | 150 |
| வாழைக்காய் | 50 | 50 | 80 |
| சின்ன வெங்காயம் | 240 | 100-250 | 320 |
| பெரிய வெங்காயம் | 210 | 200 | 250 |
| பாகற்காய் | 400 | 280 | 250 |
| வெண்டிக்காய் | 140 | 140 | 250 |
| கருணைக் கிழங்கு | 120 | 150 | 160 |
| பயற்றங்காய் | 380 | 250 | 280 |
| லீக்ஸ் | 140 | 150 | 200 |
| பீற்றூட் | 150 | 120 | 200 |
| கறிமிளகாய் | 160 | 200 | 280 |
| முருங்கைக்காய் | 1300 | 1000 | 1200 |
| போஞ்சி | 250 | 200 | 300 |
| கத்தரிதம்புள்ள | 150 | - | 250 |
| கீரை - 1 பிடி | 60 | 100 | 100 |
| தேசிக்காய் | 120 | 180 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 85 | 50-85 | 60-90 |
| இராசவள்ளி | 160 | 200 | 240 |
| வெங்காயப்பூ | 200 | - | 320 |
| முள்ளங்கி | 100 | 80 | 320 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 50 |
| வல்லாரை | 70 | 30 | 30 |
| ஈரப்பலா | - | - | - |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கத்திற்கு வழங்கிய ஆதரவை வாபஸ் பெறுகிறது இ.தொ.கா



(கொழும்பு)

அரசாங்கத்தில் இருந்து விலகி, பாராளுமன்றில் சுயாதீனமாக செயற்பட இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தீர்மானித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக கட்சியின் தலைவர் செந்தில் தொண்டமான் தனது உத்தியோகப்பூர்வ முகப்புத்தகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை பதிவிட்டுள்ளார்.

நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலைமை மற்றும் மக்களின் எதிர்பார்ப்புக்கு தலைசாய்த்தே இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது.

தொடர்ந்தும் மக்களின் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்யும் தீர்மானங்களை எடுக்கவும் மக்களுக்காக முன்னிற்கவும் இ.தொ.கா தயாராக இருக்கின்றது என பதிவிட்டுள்ளார். (நி)

# கடும் நெருக்கடியில் இருந்து இலங்கையை மீட்க இந்தியாவால் முடியும்

## சஜித் மோடியிடம் கோரிக்கை

(கொழும்பு)

கடும் பொருளாதார நெருக்கடி மற்றும் அரசியல் கொந்தளிப்பில் சிக்கியுள்ள இலங்கையை காக்க இந்தியாவால் முடியும் என்பதால், உடனடியாக உதவுமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு நேற்று அவசரமான ஒரு கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கையில் நெருக்கடிகளும் அரசியல் குழப்பங்களும் அதிகரித்துவரும் நிலையில், சஜித் பிரேமதாச இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை, அதிகபட்சமாக உதவுமாறு வலியுறுத்தி கோரிக்கை விடுத்துள்ளார்.

மக்களின் உயிர்களையும் அவர்களின் உரிமைகளையும் பாதுகாப்பதற்காக இதனை செய்ய வேண்டும் எனவும் அழைப்பு விடுத்துள்ளார். (நி)

# அவசரகால சட்டத்தை நீடிக்கும் பிரேரணைக்கு ஆதரவளிக்கப்போவதில்லை

## ஆளும் கட்சி உறுப்பினர் அதிரடி

(கொழும்பு)

அவசரகால சட்டத்தை நீடிக்கும் பிரேரணைக்கு ஆதரவளிக்கப்போவதில்லை என ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

அவசரகால சட்டத்தை நீடித்துக்கொள்வதற்காக பாராளுமன்றத்தில் பிரேரணை கொண்டுவரும் நிலையில் அதற்கு ஆதரவளிப்பது குறித்து கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவசரகால சட்டத்தை நீடிப்பதற்கான பிரேரணைக்கு அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அனுர பிரியதர்ஷன யாப்பா, சந்திம வீரக்கொடி ஆகியோரும் ஆதரவாக வாக்களிக்கப் போவதில்லை என்றும் குறிப்பிட்டார்.

இவர்கள் அல்லாமல் அரசாங்கத்தின் பங்காளி கட்சிகளில் இருக்கும் அதிகமான உறுப்பினர்கள் அவசரகால சட்டத்தை நீடிக்கும் பிரேரணைக்கு ஆதரவளிக்க மாட்டார்கள் என நம்புவதாகவும் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார். (நி)

# குற்றவாளிகள் தப்பியோடாமல் இருக்க விமான நிலையத்தை மூடுங்கள்

## பாராளுமன்றில் கோரிக்கை

(கொழும்பு)

குற்றவாளிகள் நாட்டை விட்டு வெளியேறுவதை தடுக்க அதிகாரிகள் விமான நிலையத்தை மூட வேண்டும் என மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற பாராளுமன்ற அமர்வின்போதே அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி கோட்டாப்ய ராஜபக்ஷவுக்கு நெருக்கமானவர் என கருதப்படும் அவன்ட் கார்ட் நிறுவனத்தின் தலைவர் நிஸ்ஸங்க சேனாதிபதி அவரது குடும்பத்தினருடன் இரகசியமாக நாட்டை விட்டு வெளியேறி உள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# நாட்டில் அசாதாரண நிலை தயார் நிலையில் இராணுவம்

(கொழும்பு)

இராணுவம் அரசுக்கு தேவையான பாதுகாப்பை வழங்க எப்போதும் தயாராக உள்ளதாக பாதுகாப்பு படைகளின் பிரதானியும் இராணுவத்தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

நாட்டில் அசாதாரண சூழ்நிலை நிலவும் நிலையில், வெளிநாட்டு பாதுகாப்பு ஆலோசகர்கள் மற்றும் இணைப்பாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கை ஆயுதப் படைகள் எப்போதும் அரசியலமைப்பிற்கு இணங்கி செயற்படும் நிலையில், இராணுவமும் அதற்கு விதிவிலக்கல்ல.

இராணுவம்ஒருதொழில்முறை அணி என்ற வகையில் அரசுக்கு தேவையான பாதுகாப்பை வழங்க எப்போதும் தயாராக உள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

# இன்று ஒரு தகவல்

## நமக்குள் இருக்கும் முரண்பாடுகள்

எண்ணுவது ஒன்று; பேசுவது ஒன்று; செய்வது ஒன்று;

ஒன்றை முதல்நாள் அடியோடு வெறுப்பது; அதையே மறுநாள் ஆசையோடு அடையத் துடிப்பது.

இப்படி முரண்பாடுகளின் மொத்த உருவமாய் இருப்பதில் என்ன பயன்?

இத்தகைய செயல்களால் ஏற்படும் பின்விளைவுகளையும் அவப்பெயரையும் சற்றும் எண்ணிப் பாராமல் தொடர்ந்து இவற்றைக் கடைப்பிடிப்பதால் வரும் கோளாறுகள் மிகப் பயங்கரமானவை.

வருமுன் காக்கும் இயல்பை வளர்த்துக் கொள்ளாமல், வந்தபின் புலம்பும் பட்டியலில் நாமும் சேராதிருக்க வேண்டுமானால் உடனடியாகத் தக்க முயற்சிகள் எடுத்தாக வேண்டும்.

நம்முடைய இத்தகைய இயல்புக்கு என்ன காரணம்? இதை என்றைக்கு மாற்றிக் கொள்ளப் போகிறோம் என்று சிந்திக்கத் தொடங்குவது முதல் முயற்சி. இப்படி உணரும் நிலை வந்துவிட்டாலே விடிவுகாலம் விரைவில் வரும்.

இக்குறையைக் களைய வேண்டும் என்ற மன உறுதியை அழுத்தமாய் மேற்கொள்ள வேண்டும். அது மேலோட்டமான பாசாங்கு எண்ணமாக இல்லாமல் உண்மையோடும் மனப்பூர்வமாகவும் இருக்க வேண்டும்.

தம்மிடம் இல்லாத சிறப்புகளையும் குணாதிசயங்களையும் ஒருவர் இருப்பதாகக் காட்டிக் கொள்வதன் மூலமும், இருக்கும் குறைகளை இல்லாததுபோல் மூடி மறைப்பதன் மூலமும் தற்காலிகமான பெருமைகளைப் பெறலாம்.

ஆனால், இச்செயல் புறையோடிப்போன புண்ணை ஒரு மருத்துவரிடம் மறைப்பது போலவும், இல்லாத ஒரு வலியை அவரிடம் இருப்பதாகச் சொல்வது போலவும் ஆகும்.

உதட்டளவு வார்த்தைகளால் இல்லாமல் உள்ளத்தளவு வார்த்தைகளாய் நம் பேச்சுக்கள் அமைந்தால் சொல்லுக்கும் செயலுக்கும் இடையே உள்ள முரண்பாடுகள் குறையும்.

இல்லாவிட்டால் கேலியும் குழப்பமும் வேதனையுமே மிஞ்சும்.

தெளிவற்ற சிந்தனையால் வரும் கோளாறுகள் இவை.

நமக்கென்று சில நம்பிக்கைகள் இருக்கும். ஆனால் தினமும் பெறும் அனுபவத்தின் மூலம் அவை அர்த்தமற்றவையாகவும் தோன்றும். இந்நிலையில் நம்பிக்கைகளை மாற்றி அமைத்துக் கொண்டு தெளிவான ஒரு முடிவுக்கு வரத்தான் வேண்டும்.

முரண்பாடான எண்ணங்களைச் சீர்தூக்கிப் பார்த்துத் தெளிவான முடிவுக்கு வருவது எப்படி?

ஒப்பிட்டுப் பார்ப்பது, பகுத்துப் பார்ப்பது, நடுநிலையுடன் ஆராய்வது, மதிப்பிடுவது, ஏற்றுக் கொள்வது, தீர்மானிப்பதுஎன்ற வகையில் சுய அறிவுடன் தேவையான நேரத்தைச் சிந்தனைக்கெனச் செலவழித்தால் நம்மிடமுள்ள முரண்பாடுகளை நம்மால் நிச்சயம் களைய முடியும். எண்ணமும் பேச்சும் செயலும் ஒன்றுபடும் போது நம் வெற்றி பன்மடங்காகிறது! உயர்வது எளிதாகிறது!


**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா



## முகமூடி ஆள்!

கண்டனூர் குப்புசாமிக்குக் கல்யாணம் நடந்தது. அவன் தன் மனைவி மங்கம்மாவை வாடகை வண்டியில் ஏற்றிக் கொண்டு தன் மாமனாரின் ஊரிலிருந்து தன் ஊருக்கு வந்து கொண்டிருந்தான். வழியில் ஒரு ஆற்றின் கரை ஓரம் வண்டியை நிறுத்தி அவன் கீழே இறங்கினான். சற்றுத் தூரத்தில் பழங்கால ஓட்டு வீடு ஒன்று இருந்தது. அதைச் சுற்றியுள்ள காய்கறித் தோட்டத்தில் இருவர் காய்களைப் பறித்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் சித்திரக்குள்ள தம்பதிகள்.

அவர்களைக் பார்த்து விட்டு புன்னகை புரிந்தவாறே குப்புசாமி வண்டியில் ஏறி உட்கார்ந்தான். அதை கவனித்த மங்கம்மா "ஏன் அவர்களைப் பார்த்துச் சிரித்தீர்கள்?" என்று கேட்டாள். குப்புசாமியும் "அதற்கு ஒரு காரணம் இருக்கிறது. சொல்கிறேன் கேள்" என்று கூறி விபரிக்கலானான்.

"நான்கு மாதங்களுக்கு முன் நான் இவ் வழியில் வந்தபோது இந்த ஆற்றில் வெள்ளம் வந்து விட்டது. அப்போது இருட்டி மழை வேறு பெய்ய ஆரம்பித்தது. நான் அந்த ஓட்டு வீட்டிற்குப் போய்க் கதவைத் தட்டினேன். ஒரு சித்திரக் குள்ளப் பெண் கதவைத் திறந்தவாறு "யாரது? என்ன வேண்டும்?" என்று கேட்டாள்.

நானும் "வெள்ளம் வந்ததால் அக்கரைக்குப் போக முடியவில்லை. இன்றிரவு இங்கே தங்கிப் போகலாமா?" என்று கேட்டேன். "ஓ! தாராளமாக! என்று கூறிக் கொண்டே ஒரு சித்திரக்குள்ளன் வந்தான். அவன் அந்த வீட்டுக்காரன். அவர்கள் என்னை வற்புறுத்தி தங்களோடு சாப்பிடச் சொன்னார்கள். பேச்சு வாக்கில் சித்திரக்குள்ளனின் மனைவி "என் தம்பி தம்பித்துரை இன்று வர வேண்டுமே. இது வரை வரவில்லையே" என்று கூறிக் கொஞ்சம் உணவை ஒரு பாத்திரத்தில் எடுத்து வைத்தாள். முன் அறையில் நான் படுத்துக் கொண்டேன். அவர்கள் உள் அறையில் படுத்துக் கொண்டார்கள். சற்று நேரத்திற்குப் பின் யாரோ வாசல் கதவைத் தட்டவே நான் யார் என்று கேட்டவாறே எழுந்து போய் கதவைத் திறந்தேன்.

எதிரே முகமூடி அணிந்த ஒருவன் கையில் கத்தியுடன் நின்று கொண்டிருந்தான். இதற்குள் "என் தம்பியா வந்து விட்டான்?" என்று கேட்டுக் கொண்டே வந்த சித்திரக்குள்ளப் பெண் அங்கிருந்த முகமூடி ஆளைப் பார்த்து "ஆ" வென அலறினாள். இதற்குள் முகமூடி மனிதன் கத்தியை அந்தப் பெண்ணின் கழுத்தில் வைத்து என்னைப் பார்த்து "நீ மட்டும் என்னைப் பிடிக்க முயன்றால் இவளைக் கொன்று விடுவேன்" என்று மிரட்டினான்.

அதன்பின் அவளைக் கொண்டே வீட்டிலுள்ள நகை களையும் பணத்தையும் எடுத்துக் கொண்டு என் மோதிரத்தையும்பணப்பையையும் பறித்துக் கொண்டான். (தொடரும்)

# கம்பராமாயணம்

## அயோத்தியா காண்டம்




"பரதனது சேனையைச் சாடி அழித்து இராமனே ஆளும்படி வேடுவர் ஆட்சியை மீட்டுத் தந்தனர்" என்ற புகழுக்கு உரிமை உடையவன் ஆவேன்; நாடு கொடுத்த என் நாயகனுக்கு இவர்கள், நாம் ஆளும் காடும் கொடுக்க மறுக்கிறார்களே! படை எடுத்து அழிக்க வருகிறார்களே!" என்று வீரர்களிடம் உரை நிகழ்த்தினான்.

இராமனுக்கு அன்பனாகிய குகன், இவ்வாறு பேசி நிற்பதைக் கண்ட பரதன், "இவன் யார்? என்று சுமந்திரனைக் கேட்டான். சுமந்திரன் அவனை அறிமுகப் படுத்தினான். "கங்கையின் இருகரையும் இவன் ஆட்சிக்கு உட்பட்டவை; அளவற்ற மரக்கலங்களுக்கு உரியவன்; இராமனுக்கு உயிர்த் துணைவன்; களிறு போன்ற திண்மையும், பெருமையும் உடையவன்; கடல் போன்ற படைகளை உடையவன் "குகன்" என்பது அவன் பெயர் உன்னைக் கண்டு வரவேற்க நிற்கின்றான்" என்று கூறினான். 'சுமந்திரன் கூறிய சொற்களைக் கேட்டுப் பரதன் உள்ளம் குளிர்ந்தான்; இராமனுக்கு இனிய துணைவனாய் அவன் என்னைக் காண்பதற்குமுன் நானே போய் அவனைக் காண்பேன்' என்று சொல்லிப் புறப்பட்டான். மரவுரி ஆடையும், மாசடைந்த மேனியும், சிரிப்பு இழந்த முகமும், கனியும் துயரமும் உடைய பரதனைக் கண்டான் குகன், கையில் இருந்த வில் தானாகவே கீழே நெகிழ்ந்து விழுந்தது; விம்மி விம்மி அழுதான். 'தாயுரை கொண்டு, தந்தை உதவிய தரணியைத் 'தீவினை' என்று கூறித் துறந்து, சிந்தனையை முகத்தில் தேக்கிக் காட்டுகிறான் என்றால் அவனைவிடச் சிறந்த தியாகி யாரும் இருக்க முடியாது; புகழுக்கு உரியவன் ஆகி விட்டான்; அவன் தன்மைக்கு ஆயிரம் இராமர் ஒன்று கூடினும் நிகராய் இருக்க முடியாது' என்று கூறிப் பாராட்டினான்.

'இராமன் எங்கே உறங்கினான்? இலக்குவன் என்ன செய்து கொண்டிருக்கிறான்?' என்ற கேள்விகளைப் பரதன் கேட்டான். "அல்லை ஆண்டு அமைந்த மேனி அழகனும் அவளும் துஞ்ச,

வில்லையூன்றிய கையோடும் வெய்துயிர்ப் போடும் வரன்,
கல்லையாண்டு உயர்ந்த தோளாய்! கண்கள் நீர் சொரியக் கங்குல்
எல்லைகாண் பளவும் நின்றான்; இமைப்பிலன் நயனம் என்றான்".

அழகனும் அவளும் துயில் கொள்ள இளவல் அவர்களுக்காகக் காவல் காத்தான்; உறக்கம் நீத்தான் என்று குகன் விபரித்தான்.

'யான் துன்பத்துக்குக் காரணம் ஆயினேன்; இலக்குவன் அதைக் துடைக்க நின்றான்; அவன் அன்புக்கு எல்லையே இல்லை; என் அடிமைத்தனம் அழகிது' என்றான் பரதன். நங்கையர் நடையின் அன்ன நாவாய்கள் கங்கை யில் இடமே இல்லா தபடி நிறைந்து விட்டன; அவை வந்தவர்களைக் கரை ஏற்றின.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனை காலம்தான் ஏமாற்றுவார்
இந்த நாட்டிலே சொந்த நாட்டிலே நம் நாட்டிலே
சத்தியம் தவறாத உத்தமன் போலவே நடிக்கிறார்.
– *தஞ்சை ராமையாதாஸ்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தாழுகின்ற கப்பலைப் பொறுப்பெடுக்க யார் உளர்

யாழ்ப்பாண சுகாதார வைத்திய அதிகாரியாக இருந்த வைத்திய கலாநிதி இ.தெய்வேந்திரன் அவர்கள் அனைவராலும் மதிக்கப்பட்ட ஒருவர்.

அவர் அடிக்கடி கூறுகின்ற ஒரு விடயம் தாழுகின்ற கப்பலுக்கு கப்டனாகப் போகக்கூடாது என்று.

அன்று அவர் கூறிய அந்தத் தத்துவத்தின் உண்மைப்பொருளை இன்றைய இலங்கையின் அரசியல் புலத்தில் காண முடிகின்றது.

ஆம், இலங்கை பௌத்த சிங்கள நாடு. இங்கு தமிழர்கள் வாழலாமேயன்றி அவர்களுக்கு ஆட்சி உரிமை கிடையாது எனக் கூறிய சிங்களப் பேரினவாதிகள் உளர்.

இவ்வாறு பேரினவாதம் பேசியவர்கள் இன்று இலங்கையை ஆளமுடியாமல் தவிக்கின்றனர்.

இப்போது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் பெரும்பான்மைப் பலத்தை இழந்துள்ளது.

ஆளுந்தரப்பின் பங்காளிகளாக இருந்தவர்கள் அதிலிருந்து விலகி, தாம் பாராளுமன்றத்தில் சுயாதீனமாக இயங்கப் போவதாக அறிவித்துள்ளனர்.

இந்தநிலையில் பெரும்பான்மைப் பலத்தை அரசாங்கம் இழந்துவிட்டது.

அப்படியானால், தேசிய அல்லது புதிய அரசாங்கத்தை அமைத்தாக வேண்டும்.

ஆனால் அதற்கு எவரும் தயாராக இல்லை.

தேசிய அரசாங்கத்தில் பங்கேற்கப் போவதில்லை என்று சஜித் பிரேமதாஸ அறிவித்ததையடுத்து, தேசிய அரசாங்கத்தில் இணைய மாட்டேன் என ரணில் விக்கிரமசிங்கவும் தெரிவித்துள்ளார்.

தவிர, பெரும்பான்மை பலமுடைய புதிய அரசாங்கத்தை அமைப்பதற்கும் எவரும் தயாரில்லை.

முன்பெல்லாம் அரசாங்கத்தை அமைக்குமாறு எங்களையே சபாநாயகர் அழைக்க வேண்டும் என முந்திக் கொண்டவர்கள்.

இப்போது ஐயா! ஆளைவிடு என்று கூறுமளவுக்கு நிலைமை வந்துவிட்டது.

இந்தநிலையில் அரசாங்கத்தை அமைக்க முடியாத ஒரு நாடாக இலங்கை மாறியுள்ளது.

உண்மை, வெளிநாட்டுச் சொத்துக்கள் அத்தனையும் தீர்ந்து போயுள்ள கட்டத்தில் – அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரிப்பும் தட்டுப்பாடும் நிலவுகின்ற இந்த வேளையில், சிங்கள மக்கள் ஆளுந்தரப்புக்கு எதிராகப் பெரும் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

எனவே அரசாங்கத்தை யார் அமைத்தாலும் அவர்கள்; அதிரடியாகப் பொருட்களின் விலைகளைக் குறைப்புச் செய்தல், எரிபொருள், எரிவாயு, பால்மா உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களைத் தாராளமாகக் கிடைக்கச் செய்தல், 24 மணிநேரமும் மின்சாரத்தை வழங்குதல் என்பவற்றைச் செய்தாக வேண்டும்.

இதனைச் செய்வதற்கு மந்திர சக்தியாக உண்டு?

ஆக, உங்களை நாங்கள் காப்பாற்றுகிறோம் என்று ஏதேனும் உலக நாடுகள் உத்தரவாதம் அளித்தாலன்றி, தாழுகின்ற இலங்கையின் ஆட்சிப் பொறுப்பை எவரும் கையேற்க முன்வரார்.

அவ்வாறு முன்வந்தால், அவர்கள் கோட்டாபய தரப்பை பிணையெடுத்து தாம் அகப்பட்டுக் கொள்வதாகவே நிலைமை முடியும்.

# ஜனாதிபதி கோட்டா பதவி விலகினாலும் பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்காது

## பாராளுமன்றில் நாமல் ராஜபக்ச

(கொழும்பு)

ஜனநாயக நடைமுறைக்கு அமையவே அரசாங்கம் பதவி விலக வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று விசேட உரையொன்றை ஆற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச பதவி விலகினாலும் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்காது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

"உலகின் பல நாடுகளிலும் இப்படி நடப்பதை நாம் பார்த்துள்ளோம். 88 மற்றும் 89 காலகட்டங்களிலும் இதேபோன்றதொரு சம்பவம் நடந்துள்ளது.

எங்களுக்கு பாராளுமன்றம் தேவையில்லை, ஜனநாயகம் தேவையில்லை என்றனர். இறுதியில் 60,000 இளைஞர்கள் கொல்லப்பட்டனர். இன்றும் நாங்கள் அதை நோக்கி செல்கிறோமா என்றே நாம் கேட்கிறோம்." என்றார். (ம)

## வடக்கின் பெரும் துடுப்பாட்ட போட்டி ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மத்திய கல்லூரி மற்றும் சென்.ஜோன்ஸ் கல்லூரிகளுக்கு இடையிலான வடக்கின் பெரும் போர் என வர்ணிக்கப்படும் துடுப்பாட்டச் சுற்றுப் போட்டி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஏப்ரல் 7 ஆம், 8 ஆம், 9 ஆம் திகதிகளில் இடம்பெறவிருந்த யாழ்.மத்திய கல்லூரிக்கும் சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கும் இடையிலான 115 ஆவது பெரும் துடுப்பாட்டம் தவிர்க்கமுடியாத காரணங்களினால் பிற்போடப்பட்டுள்ளது.

இதேவேளை, புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் மேற்படி இரண்டு பாடசாலைகளின் அதிபர்களும் கூட்டாக அறிவித்துள்ளனர். (ம-18,33)

ஐக்கிய மக்கள் சக்தியின் ஏற்பாட்டில்

## அரசுக்கு எதிராக யாழில் நாளை மாபெரும் பேரணி

(அராலி)

ஐக்கிய மக்கள் சக்தியின் ஏற்பாட்டில் நாளை யாழ்ப்பாணத்தில் மாபெரும் கண்டனப்பேரணி இடம்பெறவுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் வட்டுக்கோட்டைத் தொகுதி அமைப்பாளர் முருகவேல் சதாசிவம் இதற்கான அறிவிப்பை விடுத்துள்ளார்.

கோட்டபாய ராஜபக்ச அரசாங்கத்தின் காட்டுமிராண்டித்தனமான ஆட்சியைக் கண்டித்தும், அத்தியாவசிய பொருட்களின் விலை அதிகரிப்பு, மின்சாரம், பெற்றோல், டீசல், மண்ணெண்ணை, சமையல்எரிவாயு போன்ற பொருட்களின் தட்டுப்பாடு மற்றும் விலை உயர்வினைக் கண்டித்தே இப்போராட்டம் இடம்பெறவுள்ளது.

நாளை வியாழக்கிழமை காலை 10 மணிக்கு தொல்புரம் வழக்கம்பரை அம்மன் ஆலய முன்றலில் இன, மத, கட்சி பேதமின்றி அனைத்து மக்களும் ஒன்றுகூடுமாறு அழைப்பு விடுக் கப்பட்டுள்ளது. (ம-104)

## பொலிஸ் - இராணுவ மோதல் விசாரணைக்கு உத்தரவு

(கொழும்பு)

பாராளுமன்றத்துக்கு எதிரே நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் இராணுவ வீரர்கள் குழுவுக்கும் இடையில் இடம்பெற்ற மோதல் சம்பவம் தொடர்பில் உடனடியாக சுயாதீன விசாரணை நடத்துமாறு பொலிஸ் மா அதிபர் உத்தரவிட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிளில் சென்ற இராணுவத்தினரை துன்புறுத்திய பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக விசாரணை நடத்துமாறு இராணுவ தளபதி சவேந்திர சில்வா, பொலிஸ் மா அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ள நிலையிலேயே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இலங்கை இராணுவத்தின் மோட்டார் சைக்கிள் குழுவின் நான்கு மோட்டார் சைக்கிள்கள் பாராளுமன்ற வளாக வீதித் தடையை அண்மித்தபோது, தவறாக நடந்து கொண்ட இரண்டு பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக விசாரணைகளை நடத்தி அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறே இராணுவத் தளபதி கோரிக்கை விடுத்துள்ளார். (ம)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 07 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

**யாழ்.பிரதேசத்தில்** நாரந்தனை தெற்கு, நாரந்தனை நீர்வழங்கல் திட்டம், புளியங்கூடல், சரவணை சந்தி, சுருவில், உடுப்பிட்டி நூலகம், வல்லை ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** சிதம்பரபுரம், நெளுக்குளம், நீர்வழங்கல் சபை, அறுகம்புல்வெளி, ஆசிக்குளம் அவறந்துலாவ, நவகம்மானே, பாவற்குளம், பாரதிபுரம், கூமாங்குளம், நாகரிலுப்பைக்குளம், நெளுக்குளம் கலைமகள் பாடசாலையடி, நொச்சிக்குளம், அவுசதப்பிட்டிய, பழையனூர், பாண்சின்னக்குளம், பாவற்குளம், பொன்னாவரசங்குளம், இராஜேந்திர குளம், சாம் பல் தோட்டம் வீட்டுத்திட்டம், சூடுவெந்த புலவு, ட்ராக் 07, பாவற்குளம், விநாயகபுரம் வீட்டுத்திட்டம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## ஸ்ரீ இராமகிருஷ்ணரின் அமுதமொழிகள்



### குருவும் சீடரும்

ம-வுக்கு விடுமுறை நாள். மாலை மூன்று மணியளவில் தட்சிணேசுவரம் வந்தார்.

ஸ்ரீராமகிருஷ்ணர் தமது அறையில் உட்கார்ந்திருந்தார். தரையில் பாய் விரிக்கப்பட்டிருந்தது. அதில் நரேந்திரர், பவநாத் மற்றும் ஓரிரு பக்தர்கள் அமர்ந்திருந்தனர். எல்லோரும் பத்தொன்பது இருபது வயது இளைஞர்கள். குருதேவர் சிறிய கட்டிலில் அமர்ந்து கொண்டு சிரித்த முகத்துடன் அவர்களோடு ஆனந்தமாகப் பேசிக் கொண்டிருந்தார்.

ம-அறையில் நுழைந்ததும் குருதேவர் உரக்க சிரித்தபடியே, இதோ பாருங்கள்! மறுபடியும் வந்துவிட்டான்! என்று அந்த இளைஞர்களிடம் கூறினார். எல்லோரும் சிரித்தனர். ம-தரையில் வீழ்ந்து குருதேவரை வணங்கிவிட்டு உட்கார்ந்தார். முன்பெல்லாம் ம-ஆங்கிலப் படிப்புப் படித்தவர்களைப்போல் நின்றபடி கைகூப்பித்தான் வணங்குவார். ஆனால் இன்று தரையில் வீழ்ந்து வணங்கக் கற்றுக் கொண்டார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நாவலர் மாநாடு – 2022

## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் அவதரித்து 200 ஆண்டுகள் நிறைவு

## 1822 - 2022

### அறிமுகம்

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் அவதரித்து இந்த ஆண்டோடு இரண்டு நூற்றாண்டுகள் நிறைவடைகின்றன. 1822இல் அவதரித்து 1879 வரை வாழ்ந்த அப்பெருந்தகை, அக்காலத்தில் சைவசமயம் எதிர் கொண்ட பெரும் சவால்களையெல்லாம் தன் அறிவாலும் ஆளுமையாலும் வெற்றிகரமாக எதிர் கொண்டு சைவசமயத்தை நிலைநிறுத்தினார்; சைவ சமுதாயத்தில் காணப்பட்ட அநாசார வழக்குகளை நீக்கி அதனைச் சீர்திருத்தம் செய்தார்; நூல்களை எழுதி வெளியிட்டும் சைவப் பாடசாலைகளை நிறுவியும் வறியவர்களுக்கு வேண்டிய வசதிகளை ஏற்படுத்தியும் சைவ சமுதாயத்துக்கு அறிவு புகட்டி சைவசமயத்திலும் தமிழிலும் பற்றுணர்ச்சி ஓங்கச் செய்தார்; சமுதாய ஒழுக்க விழுமியங்களை மதிக்கும் மனப்பான்மையை வளர்த்தார். சமயம், தமிழ், தமிழ்ச் சமுதாயத்தின் அரசியல் பொருளாதாரம் ஆகியன தொடர்பில் தீர்க்கதரிசனத்தோடு சிந்தித்துச் செயற்பட்டார்.

தமிழ் மொழியில் அமைந்த பழைய நூல்கள் பலவற்றைச் செவ்விய முறையிலே பதிப்பித்தும் புது நூல்களை எழுதியும் தமிழ்க்கல்வி விருத்தியுறச் செய்தார். சைவத்தின் பொருட்டு அவர் ஆற்றிய பணிகள் தமிழ்ப் பணிகளாயும் பரிணமித்தன. வசனநடை கைவந்த வல்லாளராக, கேட்டார்ப் பிணிக்க உரையாற்ற வல்ல நாவலராக அவரை மிளிரச் செய்தன. நூல்களைச் செவ்விய முறையில் வெளிப்படுத்திய நல்ல பதிப்பாளராக வரலாற்றில் அவர் இடம் கொண்டார். சைவம், தமிழ் என்பவற்றுக்கு அப்பால் இன, மதம் கடந்த நிலையில் எல்லாத் தரப்பினரதும் நீதிக்காகப் போராடும் சமூக ஆர்வலராகத் துலக்கம் பெற்றார். தன் ஆயுட்காலத்தில் அவர் ஆற்றிய பணிகள் எல்லோராலும் சாதிக்கக்கூடிய சாதாரண பணிகள் அல்ல. ஆறுமுகநாவலர் அவர்களின் வாழ்வு சைவத்துக்கும் தமிழுக்கும் சமுதாயத்துக்குமாக அர்ப்பணிக்கப்பட்ட வாழ்வு.

அத்தகைய ஆளுமையின் அம்சங்கள் வருங்காலச் சந்ததியினரும் அறிய வேண்டியவை; வாழ்வின் இலட்சியங்களாகக் கொள்ளப்பட வேண்டியவை. அந்த உணர்வினை ஊட்டவல்ல வகையிலே, அவர் அவதரித்து இரண்டு நூற்றாண்டு நிறைவடைவதை அடிப்படையாகக் கொண்டு, மாநாடு ஒன்றினை ஏற்பாடு செய்வதில் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் பெருமிதம் உறுகின்றது.

### மாநாட்டின் நோக்கங்கள்

- வரலாற்றுப் புருடராகிய நாவலர் பெருமானின் சாதனைகளை அனைவரும் அறியச் செய்தல்.
- நாவலர் பெருமானின் படைப்புகளையும் அவர் பற்றிய படைப்புகள், ஆய்வுகளையும் ஆவணப்படுத்தல்.
- நாவலர் பெருமான் சைவத் தமிழ் உலகிற்காய் ஆற்றிய பணிகளின் பெருமையையும் அவற்றின் முக்கியத்துவத்தையும் உணர்ந்து அவற்றை வருங்காலத்திலும் முன்னெடுத்துச் செல்லும் மனப்பான்மையை இளம் சந்ததிக்கு ஊட்டுதல்.
- ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் குறித்த பன்முக ஆய்வுகளுக்குக் களம் அமைத்துக் கொடுத்தல்.
- இளம் தலைமுறையினரிடையே, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் பற்றிய விழிப்புணர்வையும் மதிப்புணர்வையும் ஏற்படுத்துதல்.

### மாநாட்டின் சிறப்பு நிகழ்ச்சிகள்

எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் இடம்பெறவுள்ள இம்மாநாட்டில் அருட்பெரியார்களின் அருளுரைகள், சிறப்புப் பேச்சாளர்களின் பேருரைகள், ஆய்வுரைகள், கலைநிகழ்ச்சிகள் நாவலர் ஆவண இறுவட்டு வெளியீடு, நூல் வெளியீடுகள், மாநாட்டு மலர் வெளியீடு முதலான சிறப்பு அம்சங்கள் இடம்பெறவுள்ளன. மாநாட்டின் முக்கிய அம்சமாக ஆய்வரங்கு அமையும்.

### ஆய்வுப்பொருண்மை

**ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களது ஆளுமையும் பணிகளும்**

| சமயப்பணி | கல்விப்பணி | தமிழ்ப்பணி | சமுதாயப்பணி |
|---|---|---|---|
| • சமய சீர்திருத்தம் | • பாடத்திட்ட உருவாக்கம் | • பதிப்பு | • கஞ்சித்தொட்டித்தருமம் |
| • சைவ தூசண பரிகாரம் | • பாட நூலாக்கம் | • உரைநடையாக்கம் | • வேளாண்மைச்சங்கம் |
| • கோவிற்பணி | • பாடசாலை ஸ்தாபிதம் | • இலக்கணம் | • சமூக நீதிக்கான போராட்டம் |
| • சைவசமய நூல் வெளியீடு | • கற்பித்தல் | • உரைப்பணி | • சமுதாயத் தலைவர்களை உருவாக்கியமை |
| • புராண படனம் | • மாணவர் பரம்பரை உருவாக்கம் | • செய்யுள் இலக்கியங்கள் | |
| • பிரசங்கம் | | • மொழிபெயர்ப்பு | |
| • சமயப் பிரசாரகர்களுக்கான கல்லூரி. | | | |

**நாவலர் ஆளுமை**

- ஆதீனங்களுடனான தொடர்பு
- சமகால அறிஞர்களுடனான தொடர்பு
- பத்திரிகைகளுடனான தொடர்பு
- பிரபுக்களுடனான தொடர்பு
- கிறிஸ்தவர்களுடனான தொடர்பு
- பண்ணிசைக்கு நாவலர் ஆற்றிய பணி

**ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பிக்க விரும்பும் சான்றோர்கள் கவனத்திற்கு:**

ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பிக்க விரும்புவோர், மேற்தரப்பட்ட ஆய்வுப் பொருண்மையில் தொடர்புபட்ட ஏதேனும் ஒரு தலைப்பில் ஆய்வுச்சுருக்கம் ஒன்றினை, தமிழ் மொழியில் - பாமினி எழுத்துருவில்-A4 அளவில் 2 பக்கங்களுக்கு மேற்படாமல் - 12 புள்ளி எழுத்து அளவில், கட்டுரையாளர் பெயர், முகவரி, மின்னஞ்சல் முகவரி என்பனவற்றுடன் **2022 ஏப்ரல் 25ஆம் திகதிக்கு** முன்னர்

**பணிப்பாளர்,**
**இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்,**
இல.248-1/1, காலி வீதி, கொழும்பு-4, இலங்கை.

என்ற விலாசத்துக்கோ அல்லது hindudir@gmail.com என்ற மின்னஞ்சலுக்கோ அனுப்பலாம். கடித உறையின் இடதுபக்க மூலையில் **"நாவலர் மாநாடு – 2022"** என குறிப்பிடப்படுதல் வேண்டும். தெரிவுக்குழுவின் தேர்விற்குப் பின்னர் ஆய்வரங்கு தொடர்பான மேலதிக விவரங்கள் அறியத்தரப்படும்.

248-1/1, காலி வீதி, கொழும்பு-04.
இலங்கை.

**அ. உமாமகேஸ்வரன்**
பணிப்பாளர், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்

(C-4127)

இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் இந்துப் பண்பாட்டு நிதியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிதியமைச்சின்...

இதேவேளை நேற்று முன்தினம் நிதியமைச்சராக அலி சப்ரி நியமிக்கப்பட்டிருந்த நிலையில் அவரும் நேற்று பதவி விலகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## மீண்டும் பதவி...

மூன்றில் இரண்டு பெரும்பான்மையை இழந்துள்ள நிலையில் அலி சப்ரி நிதியமைச்சர் பதவிலியிருந்தும் தான் விலகியுள்ளதாகவும் அதற்கான கடிதத்தைக் கையளித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (ம)

## திருடர்கள்...

மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

உடனடியாக விமான நிலையத்தை மூட வேண்டும் அல்லது பொதுச் சொத்துக்களை கொள்ளையடித்தவர்கள் நாட்டை விட்டு வெளியேறுவதை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் ஹேரத் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம)

## இலங்கையின்...

விரைவாகக் கண்டறிந்து நடைமுறைப் படுத்தி, இலங்கை மக்களின் மனதை வெல்லுமாறு அரசைக் கோருகிறேன்" என்று மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம)

## தனியார் பேருந்...

நேற்றிரவு 8 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. சம்பவத்தில் ஊரெழு கிழக்கைச் சேர்ந்த தர்மலிங்கம் சதீஸ் (வயது 37 ) என்பவரே உயிரிழந்தார் .

உயிரிழந்தவர் வயாவிளான் நோக்கி பேருந்தில் பயணித்துள்ளார். எனினும் தூக்கத்தில் அவர் வயாவிளானில் இறங்கவில்லை. பேருந்து நடத்துனரும் கவனயீனத்தால் கவனிக்கவில்லை.

மீண்டும் பேருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்து புன்னாலைக்கட்டுவனில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் டீசலுக்காக வரிசையில் காத்திருந்துள்ளது . அதனால் கீழே இறங்கிய பயணி நிலத்தில் அமர்ந்திருந்துள்ளார். அதனை அவதானிக்காத சாரதி பேருந்தை எடுத்தபோது பயணி மீது ஏறியுள்ளது.

பயணி சம்பவ இடத்திலேயே உயிரிழந்த நிலையில் பேருந்து சாரதி அங்கிருந்து தலைமறைவாகியிருந்தார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் இறப்பு விசாரணைகளை முன்னெடுத்ததுடன் உடற்கூற்று பரிசோதனைக்கு அறிக்கையிட்டார். (ம-33,104)

## நிதி அமைச்சராக...

திற்கு பந்துல குணவர்த்தன நியமிக்கப்படுவாரென தெரிவிக்கப்படுகிறது.

அலி சப்ரிக்கு முன்னர் பசில் ராஜபக்ஷ நிதியமைச்சராக இருந்ததோடு, அமைச்சரவை அமைச்சர்கள் அனைவரும் பதவி விலகியதை அடுத்து புதிய நிதியமைச்சராக அலி சப்ரி பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

இந்நிலையில் வெற்றிடத்தில் உள்ள நிதி அமைச்சு பதவிக்கு பந்துல குணவர்த்தன நியமிக்கப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (ம)

## இலங்கையின் அர...

துள்ளார்.

இதேவேளை, நேற்று முன்தினம் புதிய நிதி அமைச்சராக பதவியேற்ற ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி, நேற்று தமது பதவியை இராஜினாமா செய்துள்ளார். (ம)

## பின்புறமாக...

தன் பின்னர் முதற் தடவையாக பாராளுமன்றம் நேற்று கூடியபோது பாராளுமன்றத்திற்கு செல்லும் வீதி அருகே மக்கள் எதிர்ப்பில் ஈடுபட்டனர்.

எதிர்ப்பு நடவடிக்கை ஆரம்பமாவதற்கு முன்னதாக பாதுகாப்பு தரப்பினர் பொல்தூவ சந்தியில் வீதித் தடைகளை ஏற்படுத்தியிருந்தனர்.

மக்களின் எதிர்ப்பிற்கு மத்தியில் வீதித் தடைக்கு அருகே பிரமுகர்களின் வாகனங்கள் திருப்பி அனுப்பப்பட்டன.

மேலும் பாராளுமன்றத்தின் பின்புறமாக சபை உறுப்பினர்கள் வெளியேறினர். (ம)

## ஆர்ப்பாட்டத்தில்...

கொழும்பிலும் ஆர்ப்பாட்டங்கள் தொடர்ந்து முன்னெடுக்கப்படுகின்றன. கொழும்பில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டம் ஒன்றுக்குள் சிறப்புப் படையணியின் மூன்று மோட்டார் சைக்கிள்கள் புகுந்துவிட்டன. இதனால், அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

"எங்களை சுடுவதற்காக வந்தீர்கள்?" என ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷமெழுப்பினர். எனினும், கடமையிலிருந்த பொலிஸார், அந்த மோட்டார் சைக்கிள்களை திருப்பியனுப்பினர். ஆர்ப்பாட்டக்காரர்களும் ஹூ சத்தமெழுப்பினர்.

இந்த அரசாங்கம் என்ன செய்து கொண்டிருக்கிறது? போராட்டக்காரர்களை சுட்டு வீழ்த்த முயற்சிக்கிறார்களா? என சமூக வலைத்தளங்களில் கேள்வி கேட்டுள்ளனர். (ம)

## பெரும்பான்மைப்...

அரசுக்கு எதிராக நாடு முழுவதும் மக்கள் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் அரசாங்கத்தில் இருந்து வெளியேறுவதாக 39 பாராளுமன்ற உறுப்பினர்கள் அறிவித்துள்ளனர்.

இவ்வாறு அரசாங்கத்தில் இருந்து வெளியேறி சுயாதீனமாக செயற்பட உள்ளதாக உத்தியோகபூர்வமாக அறிவித்த 39 உறுப்பினர்களின் விபரம் வெளியாகியுள்ளது.

தானும் அரசாங்கத்தில் பங்காளிகளாக செயற்பட்டுவந்த 10 கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் 15 உறுப்பினர்களும் பாராளுமன்றத்தில் சுயேட்சையாக செயற்படுவதாக முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

அதன்படி, சுயேட்சையாக செயற்பட தீர்மானித்துள்ள 15 பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர்கள் வருமாறு,

01.விமல் வீரவன்ஸ 02.உதய பிரபாத் கம்மன்பில 03. வாசுதேவ நாணயக்கார 04. திஸ்ஸ விதாரண 05. டிரான் அலஸ் 06. வண.அத்துரலியே ரத்ன தேரர் 07. கெவிந்து குமாரதுங்க 08.வீரசுமண வீரசிங்க 09. அசங்க நவரத்ன 10. மொஹமட் முஸம்மில் 11. நிமல் பியதிஸ்ஸ 12. காமினி வலேகொட 13. ஏ. எல். ஏ.அதாவுல்லா 14. ஜயந்த சமரவீர 15. உத்திக பிரேமரத்ன

தானும் ஏனைய 14 பாராளுமன்ற உறுப்பினர்களும் சுயாதீனமாக செயற்பட உள்ளதாக மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

அதன்படி, சுயேட்சையாக செயற்பட தீர்மானித்துள்ள 14 பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர்கள் வருமாறு,

1.மைத்திரிபால சிறிசேன 2. நிமல் சிறிபால டி சில்வா 3.மகிந்த அமரவீர 4. தயாசிறி ஜயசேகர 5. துமிந்த திசாநாயக்க 6. லசந்த அழகியவன்ன 7. ரஞ்சித் சியம்பலாபிட்டிய 8. ஜகத் புஷ்பகுமார 9. ஷான் விஜயலால் டி சில்வா 10. ஷாந்த பண்டார 11- துஷ்மந்த மித்ரபால 12. சுரேன் ராகவன் 13. அங்கஜன் இராமநாதன் 14. சம்பத் தசநாயக்க

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியைச் சேர்ந்த 10 பாராளுமன்ற உறுப்பினர்கள் சுயாதீனமாக செயற்பட் தீர்மானித்திருப்பதாக ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் அனுர பிரியதர்ஷன யாப்பா நேற்று சபையில் அறிவித்தார்.

அதன்படி சுயேட்சையாக செயற்பட தீர் மானித்துள்ள 10 பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர்கள் வருமாறு,

1. அநுர பிரிய தர்ஷன யாப்பா 2. ஜோன் செனவிரட்ன 3. சுசில் பிரேமஜயந்த 4. சந்திம வீரக்கொடி 5. நளின் பெர்ணான்டோ 6. நிமல் லான்சா 7. சுதர்ஷினி பெர்ணான்டோ புள்ளே 8- பிரியங்கர ஜயரட்ன 9. டிரான் அலஸ் 10. ஜயரட்ன ஹேரத்

இதற்கமைய, இதுவரையில், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன, ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி உள்ளிட்ட கட்சிகளின் 39 பாராளுமன்ற உறுப்பினர்கள் சுயாதீனமாக செயற்படவுள்ளதாக அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

# சொத்துக்களை சேதப்படுத்தினால் கடும் நடவடிக்கை

## பாதுகாப்பு செயலாளர்

(கொழும்பு)

தற்போது நாடு முழுவதும் முன்னெடுக்கப்பட்டுவரும் போராட்டங்களில் பொது சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்கும் வகையில் போராட்டங்களை முன்னெடுப்பவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஓய்வுபெற்ற ஜெனரல் கமால் குணரத்ன தெரிவித்துள்ளார்.(ம)

மெகா பவர்
திகதி 05/04/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1075
சுப்பர் இலக்க 05 வெற்றி இலக்கங்கள்
G 05 36 37 65 72

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2022.04.05
சீட்டிழுப்பு இலக்கம் 038
வெற்றி இலக்கங்கள்
மிதுனம் 01 09 25 49 மிதுனம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2022/04/05
சீட்டிழுப்பு இலக்கம் 4726
ஆங்கில எழுத்து வெல்லப்பட்ட இலக்கங்கள்
E 4 7 4 6 8 3
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2022.04.05
சீட்டிழுப்பு இலக்கம் - 758
K 09 25 44 78
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
தொலைபேசி : 011 460 7000 / 011 232 4324
உத்தியோகபூர்வ முடிவுகளுக்கு : 011 456 9416

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1704 நிறம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 2022 / 04 / 04 தினம் திங்கட்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும்
I 03 15 18 75
தவிர்க்க முடியாத காரணத்தால் 2022.04.04ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவிருந்த 'சுப்பர் போல்' லொத்தர் சீட்டிழுப்பு குறித்த தினத்தில் நடைபெறவில்லை. அதற்குரிய சீட்டிழுப்பு 2022-04-05 ஆம் திகதி செவ்வாய் நடைபெறும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
அடுத்த சுப்பர் ஜக்பொட் :- ரூபா 56,297,033/-

சனிதா Shanida
திங்கட்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2022.04.04
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ.5,262,220/-
வெற்றி இலக்கங்கள்
06 25 28 66 ஆங்கில எழுத்து M
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி அதிர்ஷ்டம்
திகதி 2022-04-04
சீட்டிழுப்பு வாரம் 3416
வர்ணம் மஞ்சள்
சுப்பர் ஜக்பொட் பரிசு வெல்லப்பட்டுள்ளது. ரூ. 3,303,668/-
வெற்றி இலக்கங்கள் கடகம்
21 35 52 59
3 4 7 7 7 4 0
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 15,619,048/-

தவிர்க்க முடியாத காரணத்தினால் 2022.04.04 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுக்க தீர்மானிக்கப்பட்டிருந்த கப்ருக லொத்தர் சீட்டானது குறித்த தினத்தில் சீட்டிழுக்கப்படவில்லை என்பதுடன், அச் சீட்டிழுப்பானது 2022.04.05 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இடம்பெறும்.
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
R 01 06 10 13 65
சுப்பர் இலக்கம்
சீட்டிழுப்பு வாரம் 880 வர்ணம் இள நீலம் திகதி 2022.04.04 திங்கட்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 228,982,615/-
தொலைபேசி : 011-2 333 546-47
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.


ஜயோதா Jayoda
சீட்டிழுப்பு வாரம் 1825
சீட்டிழுப்பு திகதி 2022 / 04 / 04
வெற்றி இலக்கங்கள்
07 16 21 42 ஆங்கில எழுத்து Y
தவிர்க்க முடியாத காரணத்தால் 2022.04.04ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவிருந்த 'ஜயோதா' லொத்தர் சீட்டிழுப்பு குறித்த தினத்தில் நடைபெறவில்லை. அதற்குரிய சீட்டிழுப்பு 2022-04-05 ஆம் திகதி செவ்வாய் நடைபெறும்.
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 33,237,444/-
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அத கோடிபதி ADA KOTIPATHI
தவிர்க்க முடியாத காரணத்தால் 04-04-2022ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவிருந்த அதகோடிபதி லொத்தர் சீட்டிழுப்பு குறித்த தினத்தில் நடைபெறவில்லை. அதற்குரிய சீட்டிழுப்பு 2022-04-05 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறும்.
திங்கட்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2022.04.04
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 5,505,860/-
வெற்றி இலக்கங்கள்
18 41 56 70 ஆங்கில எழுத்து O
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "நெருக்கடி மேலாண்மையை" உடனடியாக அமுல்படுத்துக

## சபையில் முன்னாள் பிரதமர் ரணில்



(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி என்பன இலங்கைக்கு ஆதரவளிக்க முன்வந்துள்ளதாகவும் எனவே நன்கொடையாளர்களின் ஆதரவைப் பெறும் வேலைத்திட்டம் அரசாங்கத்திற்கு இருக்க வேண்டும் எனவும் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். மேலும் அரசு "நெருக்கடி மேலாண்மையை" உடனடியாக அமுல்படுத்த வேண்டும் என்று தெரிவித்தார்.

பொருளாதார நெருக்கடிக்கு குறுகிய கால தீர்வுகளை வழங்குவதற்கு பிராந்திய நாடுகளின் ஆதரவையும் அரசாங்கம் பெறவேண்டும் என முன்னாள் பிரதமர் விக்ரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றிய முன்னாள் பிரதமர் விக்ரமசிங்க, இலங்கை முன்னெப்போதும் இல்லாத காலகட்டத்தை எதிர்கொண்டுள்ளதாகவும் எனவே பாராளுமன்றத்தின் ஊடாக ஒரு கூட்டு வேலைத்திட்டம் தேவை எனவும் தெரிவித்தார்.

பொருளாதார நெருக்கடிக்கு மேலதிகமாக, நாடு தற்போது அரசியல் நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளதாக முன்னாள் பிரதமர் தெரிவித்துள்ளார்.

எனவே அரசாங்கம் உடனடியாக நிதியை கோரவேண்டும் என முன்னாள் பிரதமர் விக்ரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

குறுகிய கால நிதியுதவி மூலம் நெருக்கடியை சமாளிக்க நாட்டிற்கு ஆதரவளிக்க முடியும் என சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவ பணிப்பாளரால் தமக்கு அறிவிக்கப்பட்டதாக முன்னாள் பிரதமர் குறிப்பிட்டார்.

உலக வங்கியிடமிருந்து இலங்கைக்கு குறுகியகால நிதியுதவியை பெற்றுக் கொள்ள முடியும் எனவும் தமக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவற்றின் நிதியுதவியுடன் அரசாங்கம் மக்களின் சுமையை குறைக்க முடியும் என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், முன்னாள் பிரதமருமான விக்கிரமசிங்க மேலும் தெரிவித்துள்ளார்.

தற்போதைய பிரச்சினைகளை சமாளிக்க இந்தியா, சீனா, ஜப்பான் மற்றும் தென் கொரியா போன்ற நாடுகளும் ஐரோப்பிய ஒன்றியமும் இலங்கைக்கு ஆதரவளிக்கும் என்று முன்னாள் பிரதமர் கூறினார்.

நட்பு நாடுகளிடமிருந்து பெறப்படும் நிதியுதவி மூலம் மருந்து மற்றும் பொருட்களை கொள்வனவு செய்து, முதலில் அரசாங்கம் பொதுமக்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என முன்னாள் பிரதமர் விக்ரமசிங்க மேலும் தெரிவித்துள்ளார். (ம)

### அவசரகால சட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து

## மன்னார் மாவட்ட வைத்தியசாலை பணிப்பாளர்கள் பணிப்பகிஷ்கரிப்பு

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் பணியாளர்கள் நேற்று செவ்வாய்க்கிழமை மதியம் ஒரு மணி நேரம் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து பணிப்பகிஷ்கரிப்பை மேற்கொண்டனர். மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு முன்பாக நேற்று செவ்வாய்க்கிழமை மதியம் 12 மணிமுதல் 1 மணிவரை குறித்த போராட்டத்தில் ஈடுபட்டனர்.

13 சுகாதார தொழில் சங்கங்கள் ஒன்றிணைந்து குறித்த போராட்டத்தை முன்னெடுத்தனர்.

நாட்டில் இடம்பெற்று வருகின்ற அசம்பாவிதங்களுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையிலும், பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தும் குறித்த போராட்டத்தை முன்னெடுத்தனர்.



இலங்கையில் அமுல்படுத்தப்பட்டுள்ள அவசரகாலச் சட்டத்தை உடனடியாக ரத்து செய்யக் கோரியும், மக்களின் உரிமைகளை கட்டுப்படுத்துவதை நிறுத்தக் கோரியும், கைது செய்யப்பட்டவர்களை உடனடியாக விடுதலை செய்யக் கோரியும், ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டமையை கண்டித்தும், மருந்துப் பொருட்களின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யக் கோரியும், சுகாதார சேவைக்கு அத்தியாவசிய தேவைகளை உடனடியாக வழங்க கோரியும், மக்களின் உயிரை பாதுகாக்க கோரியும் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்ட மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் பணியாளர்கள் ஜனாதிபதிக்கு எதிராக பல்வேறு வசனங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். (ம-285)


**பணியாளர் தேவை**

வட்டுக்கோட்டை கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் பால் பொருள் உற்பத்தி நிலையத்திற்கு பணியாளர்கள் தேவை
- கிளை முகாமையாளர்
- கணக்காளர்
- பால் உற்பத்தி இயந்திர இயக்குனர் (அனுபவம் வாய்ந்தவர்கள்)
- பால் உற்பத்தி பணியாளர்கள்

(C-4129)

மேற்கூறிய பதவிகளில் அனுபவம் வாய்ந்தவர்கள் 12.04.2022 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.
நிர்வாகம்

தொடர்பு: 076 476 7600

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் மறவன்புலத்தில் 45 பரப்புக் காணி விற்பனைக்கு (நிலப்பரப்பு)
- மறவன்புலம் மாவடி சந்திக்கு அருகாமை.
- இரண்டு பரப்பாகவும் 1½ பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- யாழ்ப்பாணம் – பூநகரி பிரதான வீதியில் (A32) இலிருந்து 200m தூரத்தில்.
- நாவற்குழி சந்தியில் இருந்து 2½ Km தூரம் (A9)
- சகலகலாவல்லி வித்தியாலயம் அருகாமை
- நல்ல தண்ணீர் கிராமம் (மணல் மண்)
- அதிக குடியிருப்புக்கள் சூழ உள்ள காணி (நல்ல சூழல்)
- 16 அடி பாதையுடன்

(10927)

ஒரு பரப்பின் விலை - 3 இலட்சம் மட்டும் (300,000)

074 291 3725, 074 291 3726, 074 291 3727

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் தனங்கிளப்பு பகுதியில் 35 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (நிலப்பரப்பு)
- சுண்டிக்குளப் பிள்ளையார் கோயிலுக்கு அருகாமையில்.
- A32 பிரதான வீதியில் இருந்து இரண்டாவது காணி.
- A32 பிரதான வீதியில் இருந்து இரு வழிப்பாதைகள் உள்ளன.
- 14 அடி பாதையுடன் 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் 4 பரப்பாகவும் 5 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் கட்டுக்கிணற்றுடன் பயன்தரும் 120 தென்னைகள் உள்ளன.

(9566)

தரகர் தேவையில்லை

பார்வையிடும் நேரம்
காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை

ஒரு பரப்பின் விலை ரூ.450,000

ஜெயம் - 077 814 7389
077 241 7589

**வேலையாட்கள் தேவை**

இருவர் அடங்கிய வீட்டில் தங்கிநின்று சாதாரண வேலைகளை செய்வதற்கு ஆண் அல்லது பெண் வேலையாள் தேவை.

(10920)

077 191 1539

**கணினி திருத்தம்**

உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உடன் உங்களது வீடுகள் அலுவலகங்களுக்கே வந்து திருத்தி தருகிறோம். அழையுங்கள்!

0779086737 GUNA BEST PC (10924)

379 கே.கே.எஸ்.வீதி யாழ்ப்பாணம்.
622 மானிப்பாய் வீதி ஓட்டுமடம் சந்தி யாழ்ப்பாணம்.
கணினி லப்டொப் பிறின்டர் ஸ்மார்ட்போட்
Computer Laptop Printer Smart Board
CCTV Camera - SALE & REPAIR

**உடனடி வேலை வாய்ப்பு**

யாழ் நகரப்பகுதியில் உள்ள நிறுவனத்தில் சுத்திகரிப்பு மற்றும் பராமரிப்பு வேலைக்கு ஆள் தேவை (C-4130)



சம்பளம் - 30'000/-

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
0777-068-777

**பயிற்சியுடன் உடனடி வேலை வாய்ப்பு**

A/L எடுத்தவர்கள் மட்டும் - 6 மாத பயிற்சி



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள் (C-4130)

V2 TRAVELS

- பயிற்சிக்கால ஊக்கத்தொகை -15'000/-
- பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
- பயிற்சியின் முடிவில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்.
- வேலையின்போது ஆரம்ப சம்பளம் -20'000/-

49A,சப்பல் லேன் யாழ்ப்பாணம்.
0777-068-777


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.04.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.